பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

அதி நவீன மோஸ்தர்களில்
தரம் குன்றா
தங்க நகைகளுக்கு
அர்ச்சனா
ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி
176/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 புரட்டாதி 22 திங்கட்கிழமை (08.10 2001) தொலைபேசி 3378 ஒலி 301

## 3-ம் உலகப் போர் மூளும் அபாயம்

# அமெரிக்கா - பிரிட்டன் இணைந்து ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல்!

## இராணுவ கட்டளைத் தலைமையகம் நேற்றிரவு தகர்ந்தது

(வெளிநாட்டு செய்திச் சேவை)

அமெரிக்காவும், பிரித்தானியாவும் இணைந்து ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல்களை நேற்றிரவு 11. 30மணிக்கு (இலங்கை நேரப்படி) ஆரம்பித்துள்ளன.

ஆப்கானிஸ்தானில் தாக்குதல்களை நடத்துவதற்கு ஏற்கனவே இனங்காணப்பட்டிருந்த 23 இலக்குகளில் காபூல், ஜலலாபாத், கண்டகார் ஆகிய இலக்குகள் மீது ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன கண்டகார் மீது மேற்கொள்ளப்பட்ட ஏவுகணைத் தாக்குதலினால்அங்குள்ள இராணுவக் கட்டளைத் தலைமையகம் தகர்க்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் 11ம் திகதி அமெரிக்காவின் நியூயோர்க்கில் உள்ள உலக வர்த்தக மையம், வாஷிங்டனில் உள்ள ''பென்டகன்'' இராணுவத் தலைமையகம் ஆகியவற்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களுக்கு பதிலடி கொடுப்பதற்காகவே அமெரிக்காவும் பிரித்தானியாவும் கூட்டாக இணைந்து இத்தாக்குதலை ஆரம்பித்துள்ளன.

### ஆப்கான் நகரங்கள் மீது ஏவுகணைத் தாக்குதல்

வளைகுடாப் பகுதியில் நிலைகொண்டுள்ள அமெரிக்காவின் விமானந் தாங்கிக் கப்பலான ''பியோடா ரூஸ்

((08ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுக்கு ஆப்கான் பதில் தாக்குதல்

சர்வதேச பயங்கர வாதி ஒஸாமா பின்லேடனின் மூன்று பயிற்சி முகாம்கள் மீது அமெரிக்கா விமானத் தாக்குதல்களையும் ஏவுகணைத்தாக்குதல்களையும் மேற்கொண்டு பயிற்சி முகாம்களை நிர்மூலமாக்கியதாகவும் செய்திகள் தெரிவிக்கும் அதேவேளை தலிபானும் பதில் தாக்குதலில் இறங்கியுள்ளதாக நள்ளிரவு வரை கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

காபூல், ஜலலபாத், கண்டகார் பகுதியில் சரமாரியாக அமெரிக்க, பிரித்தானிய குண்டுவீச்சு விமானங்கள்மீது தலிபான்கள் பதில் தாக்குதல் நடத்தியதாகவும் இதன் போது விமானங்களுக்கு ஏற்பட்ட சேதவிபரங்கள்கிடைக்கவில்லை என்றும் ஏஜென்சி செய்திகள தெரிவிக்கின்றன.

(வ)

## தலிபானின் கடும் போக்கே தாக்குதலைநடத்த காரணம்

### அமெரிக்க ஜனாதிபதி அறிக்கை

ஏழாயிரத்திற்கும் அதிகமான அப்பாவி அமெரிக்கர்களின் உயிர்களைப்பலி கொண்ட சர்வதேச பயங்கரவாதத்திற்கெதிரான, ஆப்கானிஸ்தான் மீதான யுத்தம் நேற்றிரவு ஆரம்பமாகியுள்ளது. சமாதான வழிகளில் அமெரிக்கா நம்பிக்கை இழந்ததாலேயே பிரித்தானியாவுடன் இணைந்து இந்த யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்று அமெரிக்கஜனாதிபதி ஜோர்ஷ்டபிள்யு புஷ் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் மீது யுத்தத்தை ஆரம்பித்துள்ள அமெரிக்காவின் நிலைப்பாடு தொடர்பாக ஜனாதிபதி புஷ் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## சிவத்தம்பிக்கு வாய்ப்பு

அரசியல் நிர்ணயசபைக்கு தமிழ்க்கட்சிகளால் முன்வைக்கப்பட்டுள்ள மூன்றுபேரில் பேராசிரியர் கா. சிவத்தம்பியை ஈ.பி.டி.பி ஏற்றுக்கொள்ளலாமெனகொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது. (ந)

## கோப்பாயில் திருடர் கோஷ்டி அகப்பட்டது

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் பகுதியைக் கலக்கிக் கொண்டிருந்த திருடர்கோஷ்டிநேற்று முன்தினம் நள்ளிரவு அவ்வூர் இளைஞர்கள் பொதுமக்கள் ஆகியோரால் மடக்கிப் பிடிக்கப்பட்டனர்.

இவ்வாறு பிடிக்கப்பட்ட திருடர்கள் கோப்பாய் பிரதேச செயலக கிராம உத்தியோகஸ்தர்கள் எஸ். முத்துக்குமாரசாமி, எஸ். தயாபரன் எஸ். யோசெப் ரட்ணராஜா எஸ். வரதராஜன் முன்னிலையில்பொது மக்களால்இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு கோப்பாய் பொலிசாரிடம் கையளிக்கப் பட்டனர்.

[08ம் பக்கம் பார்க்க]

காவின் நிலைப்பாடு தொடர்பாக ஜனாதிபதி புஷ் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

வட்டாரங்களில் பரவலாகப் பேசப்படுகிறது. (ந)

இவ்வாறு பிடிக்கப்பட்ட திருடர்கள் கோப்பாய் பிர

டம் கையளிக்கப் பட்டனர்.

[08ம் பக்கம் பார்க்க]

# ஆப்கானிஸ்தான் மீது பிரிட்டனும் தாக்குதல்!

## ரொனி பிளேயர் அறிவிப்பு

சர்வதேச பயங்கரவாதத்திற்கெதிரான ஆப்கான்மீது போர்' நேற்றிரவு 11.30 மணிக்கு (இலங்கை நேரம்) ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டிஷ் பிரதமமந்திரி ரொனிபிளேயர் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 11ம் திகதி பல்லாயிரக் கணக்கான அமரிக்கர்களைப் பலிகொண்ட பயங்கரவாதத்திற்கெதிராக இந்த யுத்தத்தை தவிர வேறொன்றையும் எம்மால் மேற்கொள்ள முடியாது. அமரிக்காவுடன் இணைந்து பிரிட்டஷ் தாக்குதல்களை ஆரம்பித்திருப்பதாகவும் இதற்கு பிரிட்டிஸ் மக்கள தங்கள் முழு அளவினவான ஆதரவை வழங்கவேண்டும்மென்ற வேண்டுகோளையும் விடுத்த பிரதமர் ரொனிப் பிளேயர் ஆப்கானில்ருந்து வெளியேறும் மக்களுக்கு வேண்டிய நிவாரணங்களை பிரிட்டன் வழங்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார் (வ)

# ஆப்கான் தாக்குதலுக்கு உலகநாடுகள் ஆதரவு

அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து நேற்றிரவு 11.30 மணிக்கு ஆப்கானிஸ்தான் மீது ஆரம்பித்துள்ள யுத்தத்திற்கு உலகநாடுகள் பல தமது ஆதரவை தெரிவித்துள்ளன.

அவுஸ்ரேலியா, கனடா, ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகள் ஆப்கானிஸ்தான் மீது ஆரம்பித்துள்ள யுத்தத்திற்கு தமது ஆதரவு உண்டென்றும், யுத்தத்திற்கான பூரண ஒத்துழைப்பையும் வழங்கத்தயாராக உள்ளோம் என்றும் தெரிவித்துள்ளன. (வ)

# நம்பிக்கைஇல்லா பிரேரணையை த. வி. கூட்டணி ஆதரிக்கும்

## நேற்றைய கூட்டத்தில் முடிவு

(கொழும்பு)

அரசுக்கெதிராக ஐக்கிய தேசியக்கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப்பிரேரணையை ஆதரிப்பது என தமிழர் விடுதலைக் கூட்டணியின் மத்திய குழு நேற்று தீர்மானித்தது.

கூட்டணியின் மத்தியகுழுக் கூட்டம் நேற்று கொழும்பிலுள்ள கட்சிக் காரியாலயத்தில் வி. ஆனந்தசங்கரி தலைமையில் நடை பெற்றது.

இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எஸ். சிவமகாராசா யோசப் பரராசசிங்கம், வி. செல்வராசா உட்பட மத்திய குழு உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் அரசு மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக

(8ம் பக்கம் பார்க்க)

# நம்பிக்கையில்லா பிரேரணையை முஸ்லிம் காங்கிரஸ் ஆதரிக்காது!

(கொழும்பு)

நம்பிக்கையில்லாப் பிரேரணை பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படுவதற்குமுன்பு ஏற்படவிருக்கும் ஒரு ஒப்பந்தத்தின் பிரகாரம் ஐ. தே க வின் நம்பிக்கை இலலா பிரேரணைக்கு. முஸ்லிம்காங்கிரஸ் ஆதரவளிக்கமாட்டாது என்று தெரியவருகிறது. கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் புதிய அரசியல் மாற்றங்களே இவ்வாறு முஸ்லிம் காங்கிரஸை தூண்டியுள்ளதாகத் தெரியவருகிறது. கிழக்கு மாகாண முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்கள் பலர் பொ. ஐ முன்னணியுடன் ஒருஉடன்பாட்டை ஏற்படுத்திக்கொள்ளுமாறும் அது போலவே ஐ. தே. கவுடனும் அவ்வாறு உடன்பாடு ஏற்படுத்திக் கொண்டு ஒரு ஆரோக்கியமான அரசாங்கத்தை நிறுவலாம் என்றும் ரவூப் ஹகீமுக்கு தூண்டுதல்கள் விடுக்கப்பட்டு வருகின்றன கிழக்கு மாகாணத்தின் புலிகளின் நடவடிக்கைகள் அதிகரிப்பதன்

(08ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்


**விற்பனைக்கு**

சேவையிலுள்ள போட்டோ கொப்பியர் [Sharp 1016] லமினேற்றிங் மெசின் உடன் விற்பனைக்கு உண்டு தொடர்பு: 021-2810 (254) 368, கே; கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்: அல்லது 881, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3824)


## புதிய இயக்குநர்

(மானிப்பாய்)

செடெக் நிறுவனத்திற்கு புதியஇயக்குநராக அருட்தந்தை டேமியன்பெர்ணான்டோ நியமிக்கப்பட்டுள்ளார்; கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக அதன் இயக்குநராகப்பணிபுரிந்த அருட்தந்தை ஜே.பி.தேவராஜா செப்ரெம்பர்3ஆம் திகதி அப்பதவியிலிருந்து விலகியதையடுத்தே மேற்படி நியமனம் வழங்கப்பட்டது. (க-232-07)

## இலங்கையின்...

கலாயோகி ஆனந்தக் குமாரசாமி, சு. நடேசபிள்ளை, திருவாட்டி லீலாவதி இராமநாதன் முதலான இராமநாதன் குடும்பத்தவரின் தமிழ் சைவப்பணிகள் பல்துறை விரிவு கண்டன. இலங்கையின் பல்கலைக் கழக இயக்கத்தின் தந்தையாகத் திகழ்ந்தவர் சேர். பொன். அருணாசலம்; இலவசக் கல்வி யோசனையை முன்வைத்தவரும் அவரே; தெ.அ துரையப்பாபிள்ளை. அளவெட்டி அருணாசல உடையார் புத்தூர் ஆ.கனகரத்தினம் மழவராயர் கந்தையா ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை போன்றோரின் வரிசையில் ஏராளமானவர் அடங்குவர்;

1961 இல் அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்ற போது சுமார் 181 பாடசாலைகளைத் தம்வசமிருந்து கையளித்தது. யாழ்ப்பாணம் சைவவித்தியா விருத்திச் சங்கம். கிழக்கில் இராமகிருஷ்ண மிஷனின் கீழிருந்த பல பாடசாலைகளும், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி அதிகார சபைப் பொறுப்பில் இயங்கிய 13 பாடசாலைகளும் அரசிடம் கையளிக்கப்பட்டன இந்துக் கல்வி மரபில் யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை, கொழும்பு சைவமங்கையர் கழகம், கொழும்பு இந்துக் கல்லூரிச் சபை, விவேகானந்த சபை முதலானவற்றின் பணிகளும் இன்றியமையாதன.

### இந்துப் பாரம்பரியக் கல்வி மரபு

இவ்வாறு காலந்தழுவிய இலங்கையின் தேசிய கல்வி நெறிச் செல்லுகையில், தமிழரின் பங்களிபபு இன்றுவரை கணிசமானதும், முக்கியத்துவம்வாய்ந்ததுமாகும். நவீனத்துவக் கல்விச் சேர்க்கைகளிலும் தமிழர்களின் ஆலோசனைகளும் வழிகாட்டுதல்களும் முனைப்புடன் கூடிய பங்களிப்பைத் தந்துள்ளன. அரசியற் காரணங்களினால் பாகுபாடு காட்டப்படும் தமிழர்கள் கல்விபெறுதலுக்கான உகந்த சூழலும் வளங்களும் மறுதலிக்கப்படும் வருவதைத் தற்போது யதார்த்தமாக உணரமுடிகிறது; இது பற்றிய பல்வேறு குற்றச்சாட்டுகள் இலங்கைத் தமிழர்களினால் முன்வைக்கப்படுவதும் உண்மையே எனினும் இலங்கை தேசியக் கல்வி மரபின் இன்றியமையாத பங்களிப்பினை இந்துப் பாரம்பரியக் கல்வி மரபுவழங்கியுள்ளது, அதற்காக உழைத்த தமிழர்களையும் நாம் புறக்கணிக்க வியலாது. இலங்கையின் தேசியம் இவர்களுடைய உழைப்புடன் இரண்டறக் கலந்துள்ளது என்பதே பொருத்தமானதாகும்; □

---

### அரச ஊழியர் சம்பள அதிகரிப்பு

# பத்திரிகை செய்தியில் உண்மை எதுவும்இல்லை

## ஜனாதிபதி செயலகம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கவுள்ளதாக பத்திரிகை மற்றும் வெகுஜன ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில் எந்தவித உண்மையும் இல்லை என ஜனாதிபதி செயலகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அரச ஊழியர்களின் சம்பளங்களை அடுத்த ஜனவரி முதல் அதிகரிப்பது தொடர்பாக அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் சம்பள நிர்ணய ஆணைக் குழுவின் சிபார்சுகளுக்கு இணங்கவே இதுநடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகவும் பத்திரிகைகள் சில செய்தி வெளியிட்டார்:

இச்சம்பள உயர்வு நடைமுறைக்கு வரும் அடுத்த ஜனவரி வரை தனியார் துறை ஊழியர்களுக்கு இணைந்தபடி ஒன்றை வழங்குவது குறித்து அரசு ஆலோசித்து வருவதாகவும் அப்பத்திரிகைகள் தெரிவித்துள்ளன

மேற்படி சம்பள அதிகரிப்பு தொடர்பான அறிக்கை கடந்த 30 ஆம் திகதி ஜனாதிபதியிடம் கையளிக்கவிருந்ததாகவும்

ஆனால் இச் செய்தி பற்றி ஜனாதிபதியிடம் தெரிவித்த

08ம் பக்கம் பார்க்க)

### பாடசாலை மாணவரின்

# போஷாக்கு தரத்தை உயர்த்த நடவடிக்கை

(கோப்பாய்)

வடக்கு-கிழக்கில் தொடரும் யுத்த சூழ்நிலையினால் அல்லலுறும் மாணவர்களின் போஷாக்கு மட்டத்தினை அதிகரிக்கும் திட்டம் விரைவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாக கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன;

இது சம்பந்தப்பட்ட சுற்றறிக்கைகள் சம்பந்தப்பட்ட பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது;

இத்திட்டத்திற்கென வருட உத்தேச செலவு விபரம் கோரப்பட்டுள்ளதாகவும் உணவு தயாரிக்கும், செலவைப் பெற்றோரே பொறுப்பேற்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதாக மேலும் அறியப்படுகிறது: (க-79)

## நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

கைதடி கமநல சேவைகள் நிலையத்தின் புனரமைப்பு பணிகளுக்காக ஒரு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கிக் கொடுக்கப்பட்டுள்ளது.

மானிய அடிப்படையில் இலகு கடனாக ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான விதை நெல், மற்றும் உர வகைகள் என்பன பகிர்ந்தளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## வரவேற்பு

(யாழ்ப்பாணம்)

தமிழக அறிஞர் சேக்கிழாரடிப்பொடி நேற்று மாலை 4-00 மணியளவில் நல்லை ஆதினத்திற்கு விஜயஞ் செய்தபோது இந்து சமய முறைப்படி வரவேற்கப்பட்டார்.

இந்நிகழ்வில் நல்லைஆதின முதல்வர், இந்துசமய அபிமானிகள், பொதுமக்கள் எனப்பல தரப்பினரும் கலந்து கொண்டனர்; (க)

## இன்று நியமனக் கடிதம்

(யாழ்ப்பாணம்)

வலிகிழக்கு பிரதேசசபையினால் 2ம் கட்டமாக எடுத்த அபிவிருத்தித் தொண்டர்களிற்கான நியமனக் கடிதங்கள் இன்று காலை 9. 30மணிக்கு கோப்பாய் பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலாளர் தலைமையில் வழங்கப்படவுள்ளது; (க- 09)

---

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்டோபர் மாதம் 5 ஆம்திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றன;

### சங்கானை

| | |
|---|---|
| 183360 ஏ | 797015 ஏ |
| 197015 பி | 197015 சி |
| 167015 டி | 197016 ஏ |
| 205854 ஏ | 205855 ஏ |
| 205855 பி | 205870 ஏ |
| 205870 பி | 205870 சி |
| 265870 டி | 205870 ஈ |
| 205939 ஏ | 205942 ஏ |
| 205942 பி | 205954 ஏ |
| 205954 பி | 205969 ஏ |
| 205971 ஏ | 205941 பி |
| 205971 சி | 205971 டி |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 191088 ஏ | 197696 ஏ |
| 197696 பி | 202290 ஏ |
| 202508 ஏ | 206487 ஏ |
| 206645 ஏ | 207232 ஏ |
| 207232 பி | 207244 ஏ |
| 207247 ஏ | 207247 பி |
| 207248 ஏ | 207248 பி |
| 207252 ஏ | 297257 ஏ |
| 207268 ஏ | 208513 ஏ |
| 211819 ஏ | 211972 ஏ |
| 221972 பி | 211972 சி |
| 212972 டி | 211996 ஏ |
| 212016 ஏ | 212016 பி |
| 212088 ஏ | 212089 ஏ |

| | |
|---|---|
| 212090 ஏ | 212091 ஏ |
| 212092 ஏ | 212063 ஏ |
| 212095 ஏ | 212095 ஏ |
| 212096 ஏ | 212097 ஏ |
| 212098 ஏ | 212099 ஏ |
| 212101 ஏ | 212102 ஏ |
| 212103 ஏ | 212104 ஏ |
| 212108 ஏ | 212112 ஏ |
| 212126 ஏ | 212139 ஏ |
| 212139 பி | 212148 ஏ |
| 212160 ஏ | 212167 ஏ |
| 212194 ஏ | 212194 பி |
| 212294 சி | 212209 ஏ |
| 212207 பி | 212207 சி |
| 212232 ஏ | 212232 பி |
| 212236 ஏ | 212236 பி |
| 212259 ஏ | 212259 பி |
| 212268 ஏ | 212269 ஏ |
| 212280 ஏ | 212280 பி |
| 212280 சி | 212287 ஏ |
| 212287 பி | 212563 ஏ |
| 212566 ஏ | 212566 பி |
| 212566 சி | 213183 ஏ |
| 213197 ஏ | 213215 எ |
| 213215 பி | 213227 ஏ |
| 213237 பி | 213243 ஏ |
| 213254 ஏ | 213255 ஏ |
| 213265 ஏ | 213268 ஏ |
| 213268 பி | 213295 ஏ |
| 213296 ஏ | 213296 பி |
| 213296 சி | 213296 டி |
| 213297 ஏ | 213318 ஏ |
| 213324 ஏ | 213324 பி |
| 213338 ஏ | 213338 ஏ |
| 213364 ஏ | 213364 ஏ |
| 213385 ஏ | 213381 ஏ |
| 213426 எ | |

(தொடரும்)

---

## அடி காயங்களுடன் அனுமதி

(யாழ்ப்பாணம்)

சரவணை மேற்கு வேலணைப் பகுதியில் அண்மையில் இடம் பெற்றகைகலப்புச்சம்பவமொன்றில் அடிகாயங்களுக்குள்ளாகிய நிலையில் சுப்பிரமணியம் தர்மதாசன் (வயது30) என்பவர்யாழ் போதானா மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்; (உ-10)

## சூதாடிகள் கைது

(அளவெட்டி)

சண்டிலிப்பாய் தோப்புப் பகுதியில் சூது விளையாட்டில் ஈடுபட்டுவதந்குழுவினர்படையினரிடம் வசமாக மட்டிக் கொண்டனர்;

மேற்படி பகுதி இளைஞர் சிலர் கொடுத்த முறைப்பாட்டையடுத்து, சூதுவிளையாடும் இடத்தில் வைத்துநால் வரைகைதுசெய்தபடையினர், அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் மேலும் 8 சூதாடிகளையும் கைது செய்துள்ளனர்; (உ-237

## சைவப்புலவர் பரீட்சை

(கொழும்புத்துறை)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தினால் நடத்தப்படும் இளஞ்சைவப்புலவர், சைவப்புலவர் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இம்மாதம் 15ஆம் திகதிக்குமுன் அனுப்பி வைக்குமாறு சைவப் புலவர் சங்க தேர்வுச் செயலாளர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சைச்கான விண்ணப்பப் படிவங்களை 125, அரசடிவீதி கந்தர்மடத்திலுள்ள தமது அலுவலகத்தில்பெற்று பூரணப்படுத்தி அனுப்பி வைக்குமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-223)

---

நாம் . . .

மடைந்தார்;

**நிதியம்**

இவ்வாறு வளர்ச்சி கண்ட சர்வதேச அரிமாக் கழகங்கள் 1970 ஆம் ஆண்டு காலப் பகுதியில் விழிப்புலன் பாதுகாப்பிற்கும் மற்றும் ஏனைய நீண்ட கால சமூக செயற்றிட்ட உதவிக்குமாக ஒரு நிதியத்தினை ஆரம்பித்து பல சேவைகளைச் செய்து 30; 6. 2000 ஆண்டு காலப் பகுதி வரை 295, 862,442 டாலர் சொத்துக்களைக் கொண்ட ஒரு நிதியமாக விளங்குகின்றது;

**யாழ். போதனா வைத்திய சாலைக்கான உதவி**

கடந்த வருடம் இந் நிதியம் யாழ். போதானா வைத்திய சாலைக்கு அமெரிக்க டொலர் 113,000 பெறுமதியான (இலங்கை நாணயத்தில் ஏறத்தாழ 90 இலட்சம்) பல உபகரணங்களை வழங்கி உதவியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன்காரணமாகயாழ்; போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சைப்பிரிவின் செயற்பாடு 3 மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது;

**யாழ். மாவட்டத்தில்**

2001/2002 ஆண்டுக்குரிய மாவட்ட ஆளுநரான அரிமா: உபாலி சமரசிங்க MJF வின் குறிக்கோளான 'சிறந்த நாளைக்காக இன்று சேவை செய்வோம்' என்கின்ற சேவை மனப்பாங்குடன் யாழ்: மாவட்டத்தில் தற்போது 16 அரிமாக்கழகங்கள் மாவட்டம் 306 B இன் கீழ் இரண்டு பிராந்தியங்களைக் கொண்டு நான்கு வலயங்களாக ஏறத்தாழ 475 அங்கத்தவர்களுடன் செயற்படுகின்றன; □

---

## இராசி பலன்

08/ 10/ 2001
(புரட்டாதி22 திங்கள்)
சஷ்டி மு. இ 8. 40வரை
மிருகசீரிடம் பி. இ2 55வரை
ராகுகாலம் -7.32-9.02
சுபநேரம் 12; 02- 1. 32

**மேடம்**
கூட்டுமுயற்சி, இனியசம்பவம், காரியஅனுகூலம், தனவரவு

**இடபம்**
குடும்பச்சிறப்பு, நியாயவாதம், முயற்சிதாமதம், தனவரவு

**மிதுனம்**
அதிகாரம், நண்பர்கள் உதவி, போசனசுகம், காரியம் கைகூடும்;

**கடகம்**
பிரயாணம், வீண்கோபம், பாரிய நன்மை, குடும்பசுகம்

**சிங்கம்**
தொழிற் சிந்தை, மன மகிழ்ச்சி, பெருமையடைதல் காரிய அனுகூலம்

**கன்னி**
உற்சாகம், கீழ்ப்படிவு, தொழில் நன்மை, முயற்சி வெற்றி

**துலாம்**
உறவினர் சந்திப்பு, விருந்துபசாரம், புதிய தொழில் சிந்தை, கட்டுப்பாடு

**விருச்சிகம்**
தேவையற்ற பிரச்சினை, அவமானம், காரியத்தடங்கல் வியாதி

**தனுசு**
குதூகலம் கௌரவம், காரிய அனுகூலம், மனச்சஞ்சலம்;

**மகரம்**
சத்துரு ஜெயம், தொழில் விருத்தி, முயற்சிகைகூடும், தனவரவு;

**கும்பம்**
வியாபாரநன்மை, சோர்வடைதல், காரிய தாமதம் பொருட் சேர்கை;

**மீனம்**
இனசன வெறுப்பு, மனப் பதற்றம், முயற்சி தாமதம், கல்விச்சிறப்பு;

(பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது;)

வளவன்

---


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கடந்த பதினெட்டு வருடங்களாக பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்வாக சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரையை நடாத்தி வந்துள்ளது. இவ்வருட பதினெட்டாவது நினைவுப் பேருரையை நடனத்துறைத் தலைவரும், கல்வியியற் துறைப் பேராசிரியருமாகிய சபா; ஜெயராசா அவர்கள்

**'சைவ சித்தாந்தக் கல்வியும் பரத நடனமும்'**

என்னும் தலைப்பில் 2001-10-08 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நிகழ்த்தவுள்ளார்;

ஆர்வலர்கள் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்;

உபவேந்தர்

(C/2690)

## நல்லூர்
# முருகன் ஆலய பகுதியிலும் திருடர் தொல்லை

(கொழுபபுத்துறை)

நல்லூர் பருத்தித்துறை வீதியில் ஒரே சமயத்தில் இரு கடைகள் உடைத்துத் திருடப் பட்டுள்ளது.

கடந்த வியாழன்இரவு இடம் பெற்ற இத்திருட்டுச் சம்பவங் களில் நல்லூர் ஆலயம் முன் பாகவுள்ளநாதன்ரேடஸ்ஸிலீ சோடா வகைகள், பால்மா சில்லறைப் பணம்,75 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட் களும், ஆனந்தா கபேயில் சிகரெட் பைக்கற்றுக்கள், இனிப்பு வகைகள் என்பனவும் திருடப்பட்டுள்ளதாக அக் கடை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இத் திருட்டு குறித்து யாழ் பொலிஸ் நிலையத்தில் முறை யிட்டுள்ளதாகவும் தெரிவிக் கப்படுகிறது.

நல்லூர்ப் பகுதியில் அண் மைக் காலமாக திருட்டுக்கள் அதிகரித்ததன் காரணமாக விழிப்புக் குழுக்கள் அமைக் கப்பட்டமையும் குறிப்பிடத் தக்கது; (உ-223)

# சேக்கிழார் அடிப்பொடி கலாநிதிப்பட்டம் பெற்றார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப்பல்கலைக்கழ கத்தின்நேற்றுமுன்தினம் பட் டமளிப்புவிழாவில்தமிழகஅறி ஞர் சேக்கிழார் அடிப்பொடி தில்லை ஸ்தானம் நடராஜன் இராமச்சந்திரனுக்குகௌரவ இலக்கிய கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டது;

பட்டமளிப்பின் முதலா வது அமர்வில் அவருக்கு பட் டம் வழங்கப்பட இருந்த போதிலும் நேற்றுமுன்தினம் நண்பலேஅவர்யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததால்ஐந்தாவது அமர்வில் அவருக்குப் பட்டம் வழங்கப்பட்டது; (ந

# வர்த்தகரின் வங்கிக்கடன்
## அறவிட அரசியல் சக்திகள் சதி

(கொழும்பு)

அரச வங்கிகளால் வர்த்த கர்களுக்கு வழங்கப்பட்ட பெருமளவு கடன்களை மீள அறவிட எடுக்கப்படும் நடவ டிக்கைகளை சில அதிகாரிக ளும் அரசியல் சக்திகளும் தடுத்து வருவதாக ஜே.வி.பி யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள் ளார்.

வர்த்தகர்களால் பெறப் பட்ட பெருமளவான கடன் களை மீள அறவிடும் நோக் கில் புதிய சட்டமூல மொன்றை பாராளுமன்றில் நிறைவேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்.

ஆனால் இவ்வாறு பெரு மளவான கடன்களைப் பெற்றவர்களும் சட்டவிரோ தமாக கடன்களைப்பெற்றுக் கொடுத்தவர்களும் இதனைத் தடுக்கும் நோககில் சதித்திட் டங்களில் ஈடுபட்டு வருவ தாக அவர் மேலும் தெரிவித் தார். (எ-4)

# கிராம அலுவலர் நியமனம் கால தாமதம் ஏன்?
## ஜனாதிபதிக்கு அவசரசெய்தி

(நவாலி)

சமுர்த்தி அபிவிருத்தி அலு வலர் தரம் 1 ஐச் சேர்ந்தவர் களுக்கு கிராம அலுவலர்க ளாக நியமனம் வழங்குவது தொடர்பாக நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டு பல மாதங்கள கடந்தும் கூட இது வரையில் நியமனம் வழங்கப் படவில்லை.இது குறித்து உடன் நடவடிக்கை மேற் கொள்ளவும்.

மேற்கண்டவாறு ஜனாதி பதி சந்திரிகா பண்டார நாயக்கா விஜயகுமாரண துங்கவிற்கும், அமைச்சர் டக் ளஸ் தேவானந்தாவிற்கும் அனுப்பப்பட்டுள்ள அவசர செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

அச்செய்தியில் மேலும்தெரி விக்கப்பட்டுள்ளதாவது;

சமுர்த்தி அபிவிருத்தி அலு வலர் தரம் 1 ஐச் சேர்ந்த 69 உத்தியோகத்தர்களை கிராம அலுவலர்களாக நியமிக்கும் திட்டத்தின் கீழ் கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் நேர் முகப்பரீட்சையை வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தாவின் பணிப்பின் பேரில் யாழ்.செயலக திட்ட மிடல் உதவிப்பணிப்பாளரி னால் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்டது;

நேர்முகப்பரீட்சை முடிவுற் றதும் மூலப்பிரதிகளும், நிழற் பிரதிகளும் பெறப்பட்டு பொது நிர்வாக உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச் சருக்கு அனுப்பி வைக்கப்பட் டும் ஏன் நியமனத்தில் கால தாமதம் செய்கிறீர்கள் என அச்செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இதன்பிரதி சமுர்த்திஇளைஞர் விவகார விளையாட்டு துறை அமைச் சருக்கும் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (க-228)

# தென்மராட்சிப் பகுதி பாடசாலை அதிபர்கள் அமைச்சருடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பகுதியிலி ருந்து இடம்பெயர்ந்த பாட சாலைகளின் அதிபர்களான சுமார் எழுபது பேர் அமைச் சர் கே.என். டக்ளஸ் தேவா னந்தாவைச் சந்தித்து தமது குறைபாடுகள் தொடர்பாக முறையிட்டனர்.

பாடசாலைப் பொருட்க ளின் இழப்பு, பாடசாலைப் பதிவுகள் இழப்பு, பாட சாலைகளே முற்றாக அழிந் தமை போன்றவிடயங்களைச் சுட்டிக் காட்டிஇவை தொடர் பான முறைப்பாடுகளை பொலிஸாரிடம் பதிவு செய்வ தற்கு உரிய நடவடிக்கைஎடுக் கும்படி கேட்டுக் கொண்ட னர்.

மேலும் அதிபர் மற்றும் ஆசிரியர் சேவையில் இருப்ப வர்களுக்கு பத்து மாத சம் பள முற்பணக் கடன் பெற வும் ஆவன செய்யும்படி கேட் டுக் கொண்டனர்,

இவர்களது கோரிக்கை களைச் செவிமடுத்த அமைச் சர் சம்பந்தப்பட்ட உயரதி காரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி உரிய நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பணிப் புரை விடுத்தார்; (உ)

# இலங்கை தமிழர் பிரச்சினையை மெதுவாகவே அணுக வேண்டும்
## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

[யாழ்ப்பாணம்]

முட்செடிக்கு மேல்விழுந்து விட்ட சேலையையெதுவாகத் தான் எடுக்க வேண்டும் வேக மாக எடுத்தால் சேலை சிதைந்து விடும் அதுபோலத் தான் எமது இன மக்கள்எதிர் நோக்கும்பிரச்சினைகளையும் மெதுவாகவும், நிதானமாக வும்தான் அணுகவேண்டியி ருக்கிறது;

இவ்வாறுஅமைச்சர்கே.என் டக்ளஸ் தேவானந்தா தெரி வித்தார். வன்னியிலிருந்துவந் திருந்த உப்புக் கூட்டுத்தாப னத்தின் ஊழியர்களுக்கு கடந்த கால நிலுவைகள வவு னியா அலுவலகத்தில்வைத்து வழங்கப்பட்டது. இதற்காக வந்திருந்த உப்புக் கூட்டுத் தாபன ஊழியர்கள் மத்தியில் தொலைபேசி மூலமாக உரை யாற்றிய அமைச்சர் மேலும் குறிப்பிடுகையில்,

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே நாங்கள் அரசாங்கத்திற்கு ஆத ரவு அளித்து வருகிறோம். மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அதிகா ரம் அவசியமானது அதிகா ரத்தைஆயுதங்களின்மூலமாக அல்லது ஜனநாயக ரீதியாகப் பெறமுடியும் நாங்கள ஜன நாயக ரீதியாக மக்களிட மிருந்து அதிகாரங்களைப் பெற்றிருக்கின்றோம். தமிழ் பேசும் மக்களின் நலனுக்காக போராட பிரபாகரன்களுக்கு எவ்வளவுக்கு உரிமை இருக் கிறதோ அதற்குச் சற்றும் குறையாத உரிமை எமக்கும் உண்டு.

ஈ.பி.டி.யினராகிய நாங் கள் தெளிவான ஒரு அரசியல் இலக்குடன் செயற்பட்டு வருகின்றோம் மத்தியில் கூட் டாச்சி மாநிலத்தில் சுயாட்சி என்பதுவேஎமதுஇலக்குஇந்த இலக்கை ஒரு மூன்று அல்லது நான்கு வருட காலத்தினுள எட்ட முடியும் என்பதுவே எமது எதிர்பார்ப்பு,

இக்கூட்டத்தில் வைத்து சுமார் 3 4 மில்லியன் ரூபா உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்து வன்னிப் பகுதி யில் தற்போது வாழும் ஊழி யர்களுக்காக பகிர்ந்தளிக்கப் பட்டதுகுறிப்பிடத்தக்கது. (க)

# குணமாக்கல் திருவிழிப்பு

(மானிப்பாய்)

இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள'டிவைன் சென்ரர் தியான இல்ல அருட்தந்தை யரால் முறையேயாழ் குடா நாட்டில் நடத்தி வரும்இறை தியானங்கள், வழிபாடுகள் ஆகியவற்றின் இறுதி நிகழ் வாக புனித/மாட்டீனார் குருமட முற்றத்தில் இன்று திங்கள் இரவு 6.30மணி தொடக்கம் அதிகாலை6 30 மணி வரை திருவிழிப்பு ஆரா தனையும், மாபெரும் குண மாக்கல் வழிபாடும் நடை பெறவுள்ளது.

மேற்படி வழிபாட்டில்யாழ் மறைமாவட்ட அனைத்து மக்களும் பங்கு பற்றி இறை யாசிரையும், இறையன்பை யும் பெற்றுக்கொள்ள யாழ். மறைமாவட்ட கத்தோலிக்க குருக்கள் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது. (க-07-232)

# சிறந்த ஆசிரியருக்கு பரிசு

(யாழ்ப்பாணம்)

உலக ஆசிரியர் தினத்தை ஒட்டி குட்டியப்புலம் அ.த.க பாடசாலையில் இடம்பெற்ற ஆசிரியர் தினநிகழ்வின்போது சிறந்த ஆசிரியர் மூவருக்கு பரி சுகள் வழங்கப்பட்டன.

பகுதி நேர ஆங்கில ஆசிரிய ராகக் கடமைபுரியும் ஈஸ்வர மூர்த்தி, விஞ்ஞான ஆசிரியை யாக கடமையாற்றும் செல்வி கிருஷ்ணவேணி பூலோக சேகரம் தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் கற்பிக்கும் செல்வி கலைவாணி ஆகியோருக்கே மேற்படி பரிசுகள் வழங்கப் பட்டன;

பாடசாலைக் கடமைகளை ஒழுங்காக செய்தல், பாட சாலைவரவு, பாடசாலை சார்ந்த பிற விடயங்களில் ஈடு பாடு ஆகியவற்றின் அடிப் படையில் இப்பரிசுகள் வழங் கப்பட்டன.

பாடசாலை அதிபர் செ.கந் தசாமி தலைமையில் இடம் பெற்ற மேற்படி வைபவத் தில் ஆசிரியர் மகத்துவம் பற் றிய சிறப்புச் சொற்பொழிவு கள், நாடகம், கவிதை நிகழ்வு கள், குழுப்பாட்டு போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றன; (க)

# நிவாரண விநியோக ஆரம்பம்

(கொழும்புத்துறை)

இடம் பெயர்ந்தோருக கான ஒக்ரோபர் மாதத்திற் குரிய நிவாரண விநியோகம் பலநோக்குக்கூட்டுறவுச்சங்கக் கிளைகளூடாக தற்சமயம் நடைபெற்று வருகிறது;

புதிதாக வழங்கப்பட்ட முத்திரைகளுக்கே வழங்கப் படும் இந்த நிவாரணத்திற்கு அரிசி,பால்மா,சீனி, பருப்பு என்பன வழங்கப்பட்டு வருவ தாகவும் தெரிவிக்கப்படுகி றது; (க-223)

# ஆயுத கொள்வனவு விவகாரம் ஜனாதிபதி நேரில் ஆராய்வு

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன் னணி அரசிற்கும் மக்கள் விடு தலை முன்னணிக்கும் (ஜே. வி.பி) இடையே ஏற்பட் டுள்ள புரிந்துணர்வு ஒப்பந் தத்தின் அடிப்படையில் ஆயு தக் கொள்வனவு மற்றும் கடன்களை மீளப் பெறுவது தொடர்பாக கடந்த வெள ளிக்கிழமை விரிவாக ஆரா யப்பட்டது:

ஜனாதிபதியுடன் முக்கிய அமைச்சர்கள் சிலரும் இந் நிகழ்வில் பங்கு கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(க-வ

# இடம்பெயர்ந்த மக்களுக்கு மூவாயிரம் வழங்க உத்தரவு

(மந்திகை)

பளைப் பிரதேசத்திலிருந்து இடம் பெயர்ந்த மக்களுக்கு இரண்டாம் கட்டமாக மூவா யிரம் ரூபா வழங்கப்படவுள்ள தாக சம்பந்தப்பட்ட அமைச்சு வட்டாரங்கள் தெரி வித்துள்ளன:

இடம் பெயர்ந்தோர் நலன் புரிச் சங்கத்தினர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் அண்மையில் நடாத்திய பேச்சுவார்த்தையை அடுத்தே மேற் கண்ட உத்தரவு அமைச் சரால் விடுக்கப்பட்டது.

இதே வேளையில் பளைப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்களுக்கு ஏற் கனவே முதல கட்டமாக இரண்டாயிரம் ரூபா வழங் கப்பட்டதும் இங்கு குறிப் பிடத்தக்கது. (க-23)

# அமெ. இஸ்ரேல் உறவில் இழுபறி நிலையாம்

(ஜெருசலம்)

மத்திய கிழக்கு நாடுகளைச் சமாளிக்க முயல வேண்டாம் என இஸ்ரேல் எச்சரிக்கை விடுத்ததை அடுத்து, அமெ ரிக்க இஸ்ரேல் உறவில் இழு பறி நிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா, ஆப்கான் மீதான தனதுதாக்குதலுக்கு ஆதரவு தேடும் முகமாக அரபு நாடுகளுடன் கூடிய உறவை ஏற்படுத்தி வருவதும், பலஸ்தீனம் தனி நாடு அமை வது பற்றி தனது கருத்தை அமெரிக்கா வெளியிட்டமை யும் இஸ்ரேலிற்கு விசனத்தை ஏற்படுத்தி உள்ளமை குறிப் பிடத்தக்கது; (உ-2)

அன்பு மாணவர்களே!

எதிர்வரும் 17-10-2001 அன்று

## நவராத்திரி பூசை

ஆரம்பமாவதையொட்டி

## 'கவிதை மாலை'

பகுதியை வலம்புரி வெளியிடவுள்ளது. மாண வர்களாகிய உங்களின் கவிதையும் இடம் பெற வேண்டுமாயின் நான்கு வரிகளுக்கு மேற்படாத கவிதைகளை ஆக்கி பாடசாலை, கற்கும் தரம் மாணவர் பெயர் ஆகிய விபரங்களுடன்

"வலம்புரி"

இல. 15, வெள்ளாந் தெரு,

யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபா லிலோ அனுப்பி வைக்கவும்.

குறிப்பு: கவிதைகள் மாணவர்களின் சொந்த ஆக்கமாக இருப்பது அவசியம்.

(ஆ-ர்)

### தொழில் சார் கல்வியை கற்பதன் மூலமே

# இன்று உலகில் நிகழும் போட்டிகளுக்கும் சவால்களுக்கும் முகம்கொடுக்க முடியும்

## மாணவர் மத்தியில் பேராசிரியர் சிவசந்திரன் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழர் எதிர் காலம் அறிவு மேம்பாட்டிலே தான் தங்கியுள்ளது. பண்டைக் காலத்தில் உடல்உழைப்பு, முதன்மையாகவிருந்தது. மானிய சமூகத்தில் நிலம் முதன்மை பெற்றது. கைத்தொழில் காலத்தில் முதல் முதன்மை பெற்றது. இன்றைய நவீனயுகத்தில் 'அறிவு' முதன்மை பெற்றுள்ளது. எனவே மாணவர்கள் அறிவை மையமாகக் கொண்ட அபிவிருத்திக்குத் தங்களைத் தயாராக்குதல் வேண்டும்.

பல்துறைகளிலும் போட்டி நிறைந்த இந்த உலகில் கல்வியில் மேம்பாடு அடைவதன் மூலம் தான் முன்னேறமுடியும்; எதிர்காலத்தில் ஆங்கிலக்கல்வி, கணனி அறிவு என்பன கல்விசார் தொழில்களை ஆற்றுவதற்கு அவசியம். அவற்றை மாணவர்கள். பயில்வதன் மூலம் தான்உலகத்தில் இன்றுநிலவும் போட்டிகளுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்கமுடியும்.

யாழ். செங்குந்தா இந்துக் கல்லூரி முத்தமிழ் மன்றத்தின் முத்தமிழ் விழாவும் நிறுவுனர் நாளும் கடந்த திங்களன்று கல்லூரி நடராஜர் மண்டபத்தில் செல்வன் மு. இராசகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக் கழகப் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் இரா. சிவ சந்திரன் கலந்து கொண்டுஉரையாற்றுகையில் இவ்வாறுதெரிவித்தார்; அவர் மேலும் கூறுகையில்,

தமிழர் பாரம்பரியம் ஒரு கல்விப் பாரம்பரியம் அமரர் இந்து போர்ட் சு.இராசரத்தினம் போன்ற பெரியார்கள் அக்காலத்தே சைவத்தையும், தமிழையும் பேணி வளர்ப்பதற்கு தமிழர் வாழும் பிரதேசம் தோறும் பாடசாலைகளை அமைத்தார்கள்.

தமிழ் மக்களின் மேம்பாட்டிற்கு உழைத்தார்கள்; அமெரிக்க மிசனரிமார்கள் தமிழர்தம்கல்விக்குத் தொண்டாற்றினர்; எனினும் கல்வியுடன் தம்மதத்தையும் பரப்பினர்; கல்வியுடன் இணைந்த இவ்வாறான மதமாற்றத்தைத் தடுப்பதற்காகவே அமரர் இராசரத்தினம் ஈழத்தில் தமிழர்வாழும்பிரதேசங்களில் 300ற்கு மேற்பட்ட பாடசாலைகளை அமைத்தார்;

உடப்பு, பதுளை போன்ற இடங்களிலும் இவரது பாடசாலை அமைக்கப்பட்டமை வியந்து போற்றுதற்குரியது. இவரது பாடசாலைகளில் சைவமும், தமிழும்வளர்க்கப்பட்டதுடன் ஆங்கிலக் கல்வியும் போதிக்கப்பட்டது.

பெண் கல்விக்கும்முக்கியத்துவம் வழங்கப்பட்டது; ஏழைப்பிள்ளைகளின் முன்னேற்றத்திற்காக பாடசாலையில் விடுதி வசதியும் வழங்கப்பட்டது.

எந்தவகையிலும் சாதிவேறுபாடு காட்டப்படவில்லை; சமபந்தி போசனமுறைகள் மூலம்சமத்துவம் பேணப்பட்டது என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வித்துவான் க.சொக்கலிங்கம் 'நதி' எனும் மணவர் சஞ்சிகையை வெளியிட்டுவைத்து, சஞ்சிகை பற்றிய விமர்சன உரையை ஆற்றினார். (உ)

## கூடைப் பந்தாட்டம்

(வல்வெட்டித்துறை)

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்க ஆதரவில் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றுவரும் யாழ். மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான 17 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றைய தினம்,

பி.ப.4 மணிக்கு யா/கொக்குவில் இந்துக் கல்லூரி பெண்கள் அணி எதிர் உடுவில் மகளிர் கல்லூரியும், பி.ப. 4.45 மணிக்கு பரியோவான் கல்லூரி எதிர் யா/மத்திய கல்லூரியும் மோதவுள்ளன. (உ-217)

## நேரிற் சென்று பார்வை

(கோப்பாய்)

கோப்பாய் கிருஷ்ணன் கோவிலடி மற்றும், யோகபுரம், செல்வபுரம் பகுதிகளில் அமைந்துள்ள இடம் பெயர்ந்தோர் முகாம்களை வலிகிழக்கு பிரதேச சபை தலைவர் பூ. குணசிங்கம், உபதலைவர் யூ எல். ஏ. ரவி ஆகியோர் நேரிற் சென்று பார்வையிட்டு முகாம்களில் உள்ள குறைபாடுகளை நீக்கும் வகையிலான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (உ-79)

## காணாமற்போனோர் பற்றிய விசாரணைகளுக்காக உறவினர்க்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இருந்து கடந்த 1996- 1997 ஆம்ஆண்டு காலப்பகுதிகளில் காணாமற்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வரும் விசேட புலனாய்வுப்பிரிவினர், பின்வருவோர் தொடர்பான விசாரணைகளுக்காக அவர்களின் உறவினர்கள் மற்றும் சாட்சிகள் சம்பந்தப்பட்ட பகுதி கிராம சேவகர்களை உடன் யாழ். பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவித்துள்ளனர்

★ ஜீவநயன் மதியழகன் (கோ. இல. பி-102) தொல்புரம் தெற்கு, சுழிபுரம்

சாட்சிகள்:- தேவராஜ் ஆனந்திகேன, ஜே- 169 கிராம சேவகர் இராசரட்ணம் தொல்புரம், ஸ்ரீரஞ்சன்

★ சுப்பிரமணியம் முகுந்தகுமார்- (கோ. இல. பி:106) 16, பலாலி வீதி, யாழ்ப்பாணம்

சாட்சிகள்:- பொன்னுத்துரை. ஜே/79 கிராமசேவகர் சொக்கலிங்கம் பாலச்சந்திரன்

சிவானந்தன் ரமணன் (கோ. இல. பி- 107) மீசாலை கிழக்கு

சாட்சிகள்:- சிவனாந்தன், ஜே/138 கிராம சேவகர் நாகலிங்கம் பரமசிவன் கந்தர் மடம் யாழ்ப்பாணம்

★ காசித்தம்பி நர்மதாசன் (கோ. இல.பி-108) மீசாலை தெற்கு

முறைப்பாடு:- க. காசித்தம்பி

சாட்சி:-ஜே/ 318 கிராம சேவகர் நாகலிங்கம் பரமநாதன்

★ மரியம்பிள்ளை ஞானராஜன் (கோ. இல.பி-111) பிடாரி கோயிலடி, யாழ்ப்பாணம்

முறைப்பாடு;- லூத்தம்மா மரியம்பிள்ளை

★ வேலுப்பிள்ளை உதயகுமார் (கோ. இல. பி- 113) கொடிகாமம் வடக்கு

முறைப்பாடு:- க. வேலுப்பிள்ளை

★ சரஸ்வதி சௌந்தரராஜன் (கோ. இல. பி. 116) மட்டுவில் வடக்கு

சாட்சிகள்:- நாகமணி, குட்டியன் தேவராஜ் ஆவரங்கால்

★ அரியகுட்டி ஜெயகாந்தன் (கோ. இல. பி- 117) கோட்டைக்காடு மல்லாகம்

முறைப்பாடு சி. ரமணி

★ நல்லையா கேசரபிள்ளை மணிவண்ணன் (கோ.இல பி-120) மட்டுவில் தெற்கு

முறைப்பாடு: இராசரத்தினம் நாகமணி

★ நடராசா புதியராஜன் [கோ.இல.பி124] கோப்பாய் மத்தி

முறைப்பாடு:-ந.இலட்சுமி

★ பொன்னம்பலம் கண்ணதாசன் (கோ. இல. பி-125) தச்சன் தோப்பு, கைதடி

முறைப்பாடு:- சி. கனகம்மா [உ- 10,19)

## நெதர்லாந்து அதிகாரி வவு.விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான நெதர்லாந்துத் தூதரகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் நேற்றுமுன்தினம் வவுனியாவுக்கு விஜயம் செய்துள்ளார்;

அங்கு மாவட்ட அரச அதிபரையும் பாதுகாப்பு படை உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தி உள்ளார்,

இலங்கையர் பலர் நெதர்லாந்தில் அரசியல் தஞ்சம் கோரிவருக்நேரத்தில் இவரது விஜயம் முக்கியம் பெறுகின்றது. (உ-2)

## தரம்- 5 புலமைப் பரிசில் பரீட்சை முடிவுகள் சில

[அச்சுவேலி]

அண்மையில் வெளியான தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் சிலரின் பெயர்கள் பாடசாலை ரீதியாக வருமாறு.

**யாழ்.அச்சுவேலி மத்திய கல்லூரி**

இ சரண்யா, சி.மதுசா, ஸ்ரீ. கோசலா, பா. அங்குசன், கே. அதீதன், சி. விந்திஜா, பு. சாரங்கன்;

**யாழ்.அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி**

கு சிந்துஜா, ம. நிகஷா, க. மேரிநிரோசா, ம. மயூரதாஸ்;

**யாழ்.புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்**

மு. பார்ததீபா, யோ. சயந்தன்;

**யாழ். கோப்பாய் நாவலர் விதியாலயம்**

கே. மோகனராம், என்.நிஷாந்தன், பி. துளசிமாறன், ஜே. லோஜிகா, டி. சாளினி, எஸ். சிவறஞ்சன், ரி. தனம்ஜெயன், கே. கௌதமி, ஜி. கேதாரணி;

**யாழ். கோப்பாய் சரவணபவானந்தா வித்தயாலயம்**

ப.றஜிந்தன், க.அகிலா, பே. மதுரதி;

**யாழ். கல்வியங்காடு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை**

என். நிருஜன், ஏ.சிவதாஸ், ஆர். தீபன், ஆர். சோபிகா, பி. போசிகா;

**யாழ். கோப்பாய் மகாவித்தியாலயம்**

வி. பிரவீணா,

**நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்**

என், கௌரிதாஸ், கே. கிருபாலிகன், எஸ். அஜந்தன், பி. ஜசிந்தன், கே. கீதாஞ்சலி, ரி. கார்த்திகன், ஜி. பிரதீபராஜ், பி. பிரதீப், எம். தினேஸ், கே. தனுசன்;

**நீர்வேலி சி.சி.த.க பாடசாலை**

த. கிருத்திகா, அ. பகீரதி, கி. ரதீகா, க. பிரதாப்;

**யாழ். சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

கே. உமாஜினி, ரி. எரின் இக்னேசியா, ரி. தனுஜன்;

**யாழ். அளவெட்டி அருணோதயாக் கல்லூரி**

அ. லிதாசினி, கே. கிரிஷாந்தன், கே. ஜீவதாஸ், இ. துவாதரன், அ. மேரி அனெக்சலா, சி. நீரஜா, செ. அரவிந்தன்,

**யாழ். இணுவில் மத்திய கல்லூரி**

ப. தயாளினி, கே. தர்சிகா, எஸ். நிஷாந்தினி, எஸ். சஜீவன், ஜே. துஷ்யந்தி, வி. அஜநதினி, ரி. வேணிகா, எஸ். இராகவசொரூபன், எஸ். ஜெனார்த்தனன், எஸ். அனுஷன், வி. தனுகோபி, ஏ அருந்ததி, கே. பிந்துஜா, எஸ். இசைச்செல்வி, கே. அமலன், எஸ். கபிலவாசன்,

**யாழ். மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்**

சி. பிரபூர்ணா, தே. பகீரதன், ம. நிலானி,

**யாழ். மல்லாகம் விசாலாட்சி விததியாலயம்**

த. றஜீரா,

**யாழ்.சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலயம்**

க. பிராந, க. கபிர்த்தனா, மு. பிருந்தாவன், கு. நீருசன், ப. நிரோசியா, மோ. தர்சிகா, எஸ். ராகுலன், வி. கோகுலன்.

**யாழ். மருதனார்மடம் இந்துக் கல்லூரி**

கே. பிரியங்கா, ஆர். மதுரிகா, ரி. ஜெனோலினா, ஜே. சத்துருகேசன, ஏ அருண்ராஜ், கே. நிரோபிகா, எஸ். நிருபா, ஆர். ஆர்த்தியா, ஏ. எம். திரேசா.

(உ-22,218,234

## திருமலைத் தாக்குதலால் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு

(வவுனியா)

திருமலை மாவட்டத்தில் களவாஞைக்கும், பாலம் போட்டாறுக்கும் இடைப்பட்ட வீதியில் பயணஞ்செய்த கடற்படையினர்மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது கடற்படையினர் இருவர் பலியானதுடன் பெருந்தொகையான ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்;

இத்தாக்குதல் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதன்போது விடுதலைப்புலிகள் தரப்பிலிருந்து எதுவிதசேதமும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் விபரம் வருமாறு.

ஏ. கே; எல் எம் ஜீ 01
T 56 ரக துப்பாக்கி 02
நடுத்தர ரவைகள் 392
குண்டுகள் 04
ஏ. கே ரவைக் கூடு 04
உருளைரவைக்கூடு 01
எல். எம் ஜி ரவை இணைப்புக்களுடன் 275

(ம)

### யாழ். பல்கலைக் கழக

## புறநிலைப் படிப்புகள் அலகில் 20 அடிப்படைக் கற்கை நெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக் கழக புறநிலைப்படிப்புகள் அலகு, இம் மாதம் ஆரம்பமாகும் 2001/ 2002 கல்வியாண்டில்; இருபது அடிப்படைக் கற்கை நெறிகளை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளது.

சனி, ஞாயிறு தினங்களில் காலை 9.00 மணிமுதல் 12 மணிவரை பல்கலைக் கழகத்தில் இடம்பெறவுள்ள இக் கற்கை நெறிகளைப் பயில்வதற்கு 18 வயதிற்கு மேற்பட்ட எவரும் அனுமதிக்கப்படுவர். உ/த பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்கள் இக் கற்கை நெறிகளைக் கற்பதன் மூலம் அதிக பயனைப் பெறமுடியுமென புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் தெரிவித்தார்.

இக் கல்வியாண்டில் இடம் பெறவுள்ள கற்கைநெறிகளாவன. தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (அடிப்படை). தொடர்பாடலுக்கான ஆங்கிலம் (உயர்தரம்), அலுவலகத்தில் பணிபுரிவோருக்கான ஆங்கிலம், முன்பள்ளிக் கல்விக்கான ஆங்கிலம், முன்பள்ளிக் கல்வி, மனித உரிமைகள், பெண்களும் அபிவிருத்தியும், இளைஞரும் அபிவிருத்தியும், குழந்தைகளும் அபிவிருத்தியும், புவிக்கோளமயமாக்கலும் அபிவிருத்தியும், கலாசாரமும் அபிவிருத்தியும், பேண்தகு அபிவிருத்தி, அலுவலக முகாமைத்துவம்;

இதழியல், விவசாய உற்பத்தித்திறன் மேம்பாடு, உணவகங்களின் முகாமைத்துவம், தாதிப் பராமரிப்பும் முதலுதவியும், விலங்கு வளர்ப்பு, கோழி வளர்ப்பு அபிவிருத்தி, மொழிபெயர்ப்புக் கலை, நூலகவியல்;

(உ)

## இன்று ஒரு தகவல்

# பந்தபாசம் நீங்குமா?

போதிவனம் அமைதியாக இருந்தது. காற்று மெதுவாக வீசிக்கொண்டிருந்தது. இலைகள் மெதுவாக அசைந்து கொண்டிருக்கின்றன. போதிசத்துவர் தியானத்தில் ஆழ்ந்திருக்கிறார். கண்கள் மூடியிருக்கின்றன. கொஞ்சத்தூரத்தில் ஒரு நடுத்தர வயது ஆசாமி. இவர் எப்போது கண்ணைத் திறப்பார் என்றுஎதிர் பார்த்துக்கொண்டிருந்தான். கொஞ்சநேரம்ஆனதும்போதிசத்துவர் மெதுவாகக் கண்ணைத் திறந்தார். இவன் உடனே அவரின் காலில் விழுந்து வணங்கினான். உன் பெயர் என்னப்பா? என்று சத்துவர் கேட்டார். அபிநந்தன் என்றான் அவன். உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார்.

தேவா! நான் ஒரு ஏழை. எனக்கு ஒரு மனைவி மூன்று பிள்ளைகள். பந்தபாசங்களில் மாட்டிக் கொண்டு சித்திரவதைகளை அனுபவித்து விட்டேன். அது தான் உங்களிடம் வந்தேன். நீங்கள் தான் என்னைத் துறவியாக்கி ஞான மார்க்கத்தைக் காட்டவேண்டும் என்றான். போதிசத்துவர் கொஞ்சம் யோசித்த பின் மெதுவாகச் சொன்னார். 'அபிநந்தா! இந்த மரங்களில் இருக்கிற இலைகளைப்பார்! அவை ஏன் ஆடுகின்றன தெரியுமா? காற்று வந்து மோதுகிறதால் ஆடுகின்றன. பாசம் என்கிற காற்று வந்து மோதுகிறபோதெல்லாம் மனித இலைகள் இப்படித் தான் ஆடும். முதலில் உன்னுடைய மனதில் இருக்கிற பாசத்தை அறவே விட்டுவிட வேண்டும். 'அது உன்னால் முடியுமா?' என்று கேட்டார். 'முடியும்' என்றான் இவன்.

'சரி! அப்படி என்றால் நீ இற்றையிலிருந்து இந்தப் போதிவனத்திலேயே தங்கலாம்' என்றுசொல்லி விட்டார் போதிசத்துவர். அபிநந்தன் அங்கேயே தங்கினான். கொஞ்ச நாட்களாயின! போதிசத்துவர் குளிப்பதற்காகப்போய்க்கொண்டிருந்தார் வழியில் அபிநந்தனைக் கவனித்தார். அவன் பக்கத்தில் ஒரு நாய்க்குட்டி இருக்கிறதைப் பார்த்தார். 'என்னப்பா இங்கு நாய்க்குட்டி' என்றார் பிரபு! இந்த நாய் எப்பவும் என்னை விட்டு விலகுவதேயில்லை. இதைமட்டும் கூட வைத்திருப்பதற்கு அனுமதி கொடுங்கள்' என்றான். போதிசத்துவர் சிரித்துக் கொண்டே போய் விட்டார்.

கொஞ்ச நாள் ஆகி விட்டது. இவர் போய்க் கொண்டிருக்கிற வழியில் அபிநந்தனைக் கண்டார். அவன்பக்கத்தில் அந்த நாய்க் குட்டியும் ஒரு சின்னப்பையனும் நின்று கொண்டிருப்பதைக் கண்கண்டார். 'அபிநந்தா யார் இந்தச் சின்னப் பையன்?' என்று கேட்டார். 'பிரபு இவன் என்மகன்! இந்தநாயை விட்டு இவனால் இருக்க முடியவில்லை - - - - அதனால் இவனை மட்டும். - - - என்று இழுத்தான். போதிசத்துவர் இப்போதும் சிரித்துக் கொண்டே போய் விட்டார். இன்னும் கொஞ்ச நாட்களின் பின்னர்போதிவனத்துக்குளத்துக்கருகில் அபிநந்தன் ஒரு பெண்ணுடன் காணப்பட்டான். போதிசத்துவர் 'யார் இந்தப் பெண்?' என்று கேட்டார். அபிநந்தன் 'தேவா! இவள் என்னுடைய மனைவி! என் மகனை விட்டு விட்டு இவளால் ஒரு வினாடிகூட இருக்க முடிவதில்லை. அதனால் இவளையும் - - - - - - என்று இழுத்தான்.

போதிசத்துவர் சிரித்தார். சிரித்துக் கொண்டே இரண்டு பாத்திரங்களை எடுத்தார். ஒரு பாத்திரத்தில் நிறையப் பண்டங்கள் இருந்தன. மறு பாத்திரம் காலியாக இருந்தது. பண்டங்கள் இருந்த பாத்திரத்தை தண்ணீரில் விட்டார். அது அப்படியே மூழ்கி அடியில் போய்விட்டது காலியான பாத்திரத்தைத் தண்ணீரில் விட அது மிதந்து கொண்டிருந்தது. போதிசத்துவர் "அமிழ்ந்து போன கனத்த பாத்திரம் பாசப் பாத்திரம். மிதக்கின்ற காலிப் பாத்திரம் ஞானப்பாத்திரம்' என்று சொன்னார்.

'அபிநந்தா! உதிர்ந்து போக விரும்புகிற ரோமங்கள் உதிர்ந்து போகின்றன. உதிர விரும்பாதன நரைத்து விடுகின்றன. உதிர்ந்தது ஓடிப் போய்விட, உதிராதவை தலையில் இருந்து கொண்டே கேலி செய்கின்றன. விலக்க முடியாத பந்தங்களும் அப்படிப்பட்டவைதான். உன்னுடைய இருதயம் பாசத்துக்காகவே படைக்கப்பட்டது. சித்திரவதை என்பது அதற்கு நீ கொடுத்தே தீரவேண்டிய விலை... போய் வா!' என்று விடை கொடுத்து அனுப்பி விட்டார் போதிசத்துவர்.

அதனால், நான் துறவியாகப் போகிறேன். ஞானியாகப் போகிறேன் என்று சொல்வது சுலபம். அப்படி ஆகிறது மிகவும் கஷ்டம். அவை சாதாரண விஷயமில்லை. மொட்டைஅடித்து, காவியுடை கட்டிவிட்டால், பந்தபாசம் போய்விடாது. ஆசையை விடுவதற்கு மனிதன் பழகவேண்டும். அதற்காகத் தான் சில புண்ணிய நதிகளில் போய் முழுகி நமக்குப் பிடித்தமான எதையாவது விட்டுவிட்டு வரவேண்டும் என்று வைத்திருக்கிறார்கள். சிலர் காசு, பணம் எல்லாம் தண்ணீரில் வீசி எறிவார்கள்.

நம்மைப் போன்ற ஒருவர் சில ஆசைகளை விட்டுவிட வேண்டுமென்ற நோக்கத்துடன் புண்ணிய தீர்த்தத்தில் முழுகினார். சில சில்லறைக் காசுகளைக் கையில் வைத்துக் கொண்டு தண்ணீரில் இறங்கி மூக்கைப் பிடித்துக் கொண்டு முழுக்குப் போட்டார். வெறுங்கையுடன் கரையேறி ஈர உடையுடன் வந்தார். பக்கத்தில் நின்றவர் இப்போது எப்படி என்று கேட்டார். 'மனம் நிறைந்திருக்கிறது. இனி அடிக்கடி வந்து முழுக்குப் போடலாம் என்று தோன்றுகிறது' என்றார் இவர். ஏன் என்று கேட்டார் அவர். 'நான் தண்ணீரில் மூழ்கிற வரைக்கும் எதையும் விட்டுவிடும் ஆசையில் தான் போனேன். ஆனால் அடியில் போய்ப் பார்த்தால், யாரோ வீசியெறிந்த தங்க வளையல் ஒன்று கையில் தட்டுப்பட்டது. உடனே என் முடிவை மாற்றிக் கொண்டேன். சம்சாரத்துக்கு உதவுமென்று அதை எடுத்து மடியில் சொருகிக் கொண்டு வெளியே வந்து விட்டேன் என்றார் இவர். இவருடைய சம்சாரம் மிகவும் கொடுத்து வைத்தவர். □

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# உறுப்பினர்கள் கட்சி மாறாது

# ஐ.தே.க. பார்ப்பது நல்லது

## றெஜிரணதுங்கா கிண்டல்

(கொழும்பு)

அரசாங்கத்தை நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் வீழ்த்துவதற்கு எம்மிடம் போதிய பெரும்பான்மை பலம் உண்டு என்று ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

அதேவேளைஇதுபற்றி அரசதரப்பு பிரதமகொறடா றெஜிரணதுங்க தெரிவிக்கையில்: எமது 109 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஜே.வி.பியின் 10 பாராளுமன்ற உறுப்பினர்களும் உள்ளனர். வேண்டுமானால் ஐ.தே. கட்சியினர் தனது பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சி மாறாமல் பார்த்துக்கொள்வதில் கவனம் செலுத்துவது நல்லது என்று கிண்டல் செய்துள்ளார்.

நம்பிக்கையில்லாப் பிரேரணையைத் தவிர்ப்பதற்காக ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைப்பதற்கு இடமுண்டா என்று பத்திரிகையாளர் ஒருவர் கேட்டகேள்விக்கு அவர் பதில்அளிக்கையில் நாம திகில் அடைந்து இப்போது செயற்படவில்லை. அதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை. பாராளுமன்றம் கலைக்கப்படுவது எதற்கும் மாற்றுத் தீர்வும் அல்ல என்று பதில் அளித்தார்.

மகிந்த ராஜபக்ஷ, அலவி மௌலானா ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில் எஸ்.பி. திஸநாயக்கா ஜீ.எல். பீரிஸ் மகிந்த விஜயசேகரா ஆகியோர் கட்சிக்குத் துரோகம் செய்யமாட்டார்கள் கருத்து வேறுபாடுகள் எம்மிடையே இருப்பினும் அவற்றைப்பேசித் தீர்த்துக் கொள்ள எம்மால் முடியும் என்று குறிப்பிட்டனர். (எ)

## கூடைப் பந்தாட்டம்

(வல்வெட்டித்துறை)

யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்டச் சங்க ஆதரவில் யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில்இடம் பெற்று வரும். யாழ் மாவட்டப்பாடசாலைகளுக்கிடையிலான 17வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் நாளைய தினம்,

பி.ப4மணிக்கு யா/கொக்குவில் இந்துக்கல்லூரி பெண்கள் அணி எதிர் யா/வேம்படி உயர்தரப்பாடசாலை அணியும்,

பி.ப.4,45மணிக்கு யாழ். கொக்குவில் இந்துக்கல்லூரி அணி எதிர் யாழ் இந்துக கல்லூரி அணியும் மோதவுள்ளன. (உ-217)

## சமுதாயம் பயனுறும் வகையில் பணிகளை முன்னெடுப்போம்

# அமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

எமக்குள்ள அரசியல்பலம் தற்துணிவு உங்களின் அவசர அவசியத்தேவை என்பவற்றின் அடிப்படையிலேயே நாங்கள் முடிவுகளை மேற்கொண்டு செயற்படுகின்றோம். சமுதாயத்திற்குப் பயனுள்ள வகையில் நாங்கள் தொடர்ந்தும் பணிபுரிகின்றோம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.

இவ்வாறு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா சுகாதாரத் தொண்டர்களுக்கான மாதாந்தகொடுப்பனவு வழங்கப்படும் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்,

மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி எக்காலமும் பிரிக்கமுடியாத வடக்கு -கிழக்கு ஒரு அலகு அதற்கு விசேட அதிகாரம என்னும் தெளிவான இலக்கோடு செயற்பட்டு வருகின்றோம். மெல்லெனப்பாயும் தண்ணீர் கல்லையும் உருக்கப் பாயும் என்பார்கள் நாமும் அதேபோலவே செயற்படுகின்றோம் என்றார்.

இவ் வைபவத்தில் பாராளுமன்ற உறுப்பினர் கே. வி. கே. ஜெகன் மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள். சுகாதாரத்துறை அதிகாரிகள் உட்படப்பலர் கலந்துகொண்டனர். (உ)

## மேலதிக நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

52 வது படையணியின் மேற்பார்வையின் கீழ் 10வது விஜயபாகு படைப் பிரிவினர் மற்றும் அதிகாரிகளும் இணைந்து வரணி வடக்கு, காம்பைக்குறிச்சி வடக்கு மேற்கு, இடைக்குறிச்சி இயற்றாலை, தாவடி, முதலிய பகுதியில் அண்மையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களில்350 வறிய குடும்பங்களுக்கு சுமார் 6 ஆயிரம் கிலோ அரிசியினை இலவசமாக வழங்கியுள்ளனர். (உ)

## விற்பனை பகுதி இயக்கமில்லை

(இணுவில்)

உடுவில் சமநலசேவை அலுவலகத்தின் விற்பனைப் பகுதி இயங்காமை குறித்து அப்பகுதி விவசாயிகள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (உ-49)

# நல்லாசிரியன் மாணவர்க்கு மாண்புமிகு பரிசாவான்

[யாழ்ப்பாண.]

ஒழுக்கமும் தன்னடக்கமும், இன்சொல்லும் உயர்ந்த எண்ணங்களும் உள்ள நல ஆசிரியன் மாணவர்களுக்கு கிடைக்கும் மாண்புமிகு பரிசாவான்.

இவ்வாறு உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரிய தின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது முன்னாள் அதிபர் சமூகஜோதி கா. கணேசதாசன் குறிப்பிட்டார்.

வித்தியாலய மாணவத் தலைவி செல்வி லே. சுவிதாவின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்,

ஐங்குரவர்களில் ஒருவர் எனற பெருமை ஆசிரியர்களுக்குஉண்டு. மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் போது தந்தை, தாயாருடன் கண்கண்ட தெய்வமாக ஆசிரியன் போற்றப்படுவதைக் காண்கிறோம். இன்றைய தினம் மாணவர்கள் ஆசிரியர்களுக்கு மலர்மாலை அணிவிதது கௌரவித்தார்கள். ஆசிரியர் தினத்தில் மட்டுமலல, என்றும ஆசிரியர்களை மதிக்கும் பண்பை மாணவர்கள பேணி நல்வழியில் நடக்க வேண்டும் என்று குறிபபிட்டார்.

மாணவர்களது கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. ஆசிரியர் இ. இந்திரன் நன்றி கூறினார். (எ)

# ஊழியர்களின் நிலுவை அமைசசர் ஏற்பாட்டில் வழஙகப்பட்டது

## உப்புக் கூட்டுத்தாபன

(வவுனியா)

ஆனையிறவு பரந்தன் உப்புக் கூட்டுத்தாபனத்தில் பணியாற்றி இடம்பெயர்வு காரணமாக கடந்த 1997ஆம் ஆண்டு முதல் வேதனத்தைப் பெற்றுக்கொள்ளாத 174 ஊழியர்களுக்கான ஒரு வருட நிலுவை, வேதனம் வவுனியாவில் வைத்து கடந்த புதன் கிழமை வழங்கப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவின் முயற்சியின் காரணமாகவே இவர்களுக்கான நிலுவை, வேதனம் வடமாகாண புனர்வாழ்வு-புனரமைப்பு அதிகார சபையின் நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அமைச்சின் வவுனியா மாவட்ட இணைப்பாளர் அன்ரனி இமானுவேல் சில்வா தலைமையில் அமைச்சு அலுவலகத்தில், அண்மையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் மாவட்ட அரசஅதிபர் கே. கணேஷ் மேலதிக அரச அதிபர் சி. இரகுநாதபிள்ளை திட்டப்பணிபபாளர் திருமதி விஜயலெட்சுமி கேதீஸ்வரன், உபபுக் கூட்டுத்தாபன பொது முகாமையாளர் எஸ். ஆறுமுகசாமி, அமைச்சின் கணக்காளர் திருமதி வி. அரியரட்ண ஆகியோர் கலந்து கொண்டனர். (உ)

## சிந்தனைக்கு விருந்து

### நிறை வெறியிற் செல்கிறான்

தீர்த்தம் முடிகின்ற தேதி வரை பக்தியொடு
கார்த்திகை பாலற்குக காவடியும்- ஆர்த்த
பிறவிகெட நன்கு பிரதட்டையுமாய்ப போக்கி
நிறைவெறியிற் செல்கிறான் இனறு.

'பழையவன்'

# பாரிஸ் நகரில்பெருமெடுப்பில்தேடுதல்
# பதற்றத்தின் மத்தியில் இல.தமிழர்

(பாரிஷ்)

பிரான்ஸ் தலைநகரில் வாழும் இலங்கைத் தமிழர் பெரும் பயப்பீதியுடன் தமது பொழுதைக் கழித்துவருவதாக அந்த நாட்டிலிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன:

கனடாவில் 300 தமிழர் சமூக விரோதச் செயல்கள் தொடர்பாக கைதுசெய்யப்பட்டதையடுத்து தாமும் கைது செய்யப்படலாமென்ற அச்சத்தில் தமிழர் தமது பொழுதை பயத்தின்மத்தியில் கழித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது:

இதேவேளையில் தீவிரவாத அமைப்புக்களுடன் தொடர்புடையவர்கள் என்று சந்தேகிக்கப்படும் 4 பேர் பிரான்ஸ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்;

அல்ஜிரிய இஸ்லாமியஆயுதக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள என்ற சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்ட நான்குபேரின் விசாரணைகளின் பின்னர் பொலிஸார் பாரிஸ் நகரில் தீவிரமாக தேடுதல்நடத்தி வருகிறார்கள்.

இத்தேடுதலின்போது பலரது வீடுகள் துப்பறியும் கருவிகள் மற்றும் மோப்ப நாய்கள் கொண்டு சோதனையிட்டு வந்ததாகவும் இத்தேடுதலில் சந்தேகத்திற்கிடமான நபர்களோ அல்லது தடயங்களோ இதுவரை கிடைக்கவில்லை எனவும் தெரியவருகிறது:

அல்பேனிய இஸ்லாமிய ஆயுதக்குழுவுக்கும் பின்லேடனுக்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக தெரியவந்த தகவலின் காரணமாக இத்தீவிர தேடுதல் வேட்டை இடம் பெற்றுள்ளது: (க-7)

# இந்த ஆண்டின்
# 47ஆவது படுகொலை
# கனடாவில் அரங்கேற்றம்

(ஒட்டாவா)

இந்த ஆண்டின் 47 ஆவது கொலை என வர்ணிக்கப்படும் படுகொலைச் சம்பவம் ஒன்று கனடாவின் ரொரன்றோ நகரில் வெகு கச்சிதமாக அண்மையில் அரங்கேற்றப்பட்டுள்ளது.

ஏ.கே: கண்ணன் கோஷ்டியைச் சேர்ந்தவரென்று கருதப்படும் சுதர்சன் வேலாயுதபிள்ளை (வயது-23) என்பவரே எதிர்க் கோஷ்டியினரால் படுமோசமாக சுட்டுக் கொல்லப்பட்டவராவார்;

10 இற்கும் மேற்பட்ட சூட்டுக்காயங்கள் இவரது சடலத்தில் காணப்பட்டதாகவும் இவரது காதலியின் வீட்டின் முன்பாக சடலம்மீட்கப்பட்டதாகவும் மேலும் அறியப்பட்டுள்ளது.

மேற்படி நபர் மீது ஏற்கனவே இரு தடவைகள் கொலை முயற்சிகள் இடம்பெற்றதாகவும் ஆனால் அதிர்ஷ்டவசமாக அவர் தப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது:

பொலிஸ் விசாரணைகள் துரிதப்படுத்தப் பட்டுள்ளபோதிலும், கொலைச் சந்தேகப் பேர்வழி இதுவரையில் கைது செய்யப்படவில்லை; எனினும் வீ.வி.ரி அணியைச் சேர்ந்த ஒருவர் இக்கொலையைச் செய்திருக்கலாமென வேறு ஒரு தகவல் தெரிவித்துள்ளது. (க)

# போட்டியின்றி தெரிவாகும்
# சுப்பிரமணியம்
# ஊராட்சி மன்றம்

(சென்னை)

ஊராட்சிமன்றத்தேர்தலில் கடந்த 50ஆண்டுகள்போட்டியின்றி அங்கத்தவர்களைத் தேர்ந்தெடுத்த பெருமை சுப்பிரமணியம் ஊராட்சி மன்றத்தையே சாரும்;

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் சுப்பிரமணியம் ஊராட்சி மன்றத்துக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பொழுது, எதிர் மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படாதவிடத்து போட்டியின்றி ஊராட்சி மன்றத்துக்குத் தெரிவாகி வந்தமை குறிப்பிடத் தக்கது.

தமிழகத்திலே போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி மன்றமாக சுப்பிரமணியம் ஊராட்சி மன்றம் திகழ்கிறது.

இந்த ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் பெருமாளும் மற்றும் 09 உறுப்பினர் பதவிகளுக்கு சின்னவீரப்பன், முத்துரங்கன், முத்து வீரப்பன், செந்தமாரை, கதிரேசன் கண்ணன், கருப்பையா பொன்னழகு முருகேஸ்வரி ஆகியோர் தெரிவாகியுள்ளனர்; (து)

# விஷச்சாராயம் அருந்தியோர்
# 21 பேர் பலி; 35பேர் ஆஸ்பத்திரியில்
# கிராமம் முழுவதும் சோகமயம்
## சென்னையில் அதிர்ச்சியூட்டும் சம்பவம்

(சென்னை)

சென்னை செங்குந்தப் பகுதியில்விஷச் சாராயம் அருந்தி 21 பேர் இறந்துள்ளனர். 35 பேர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்;

இச் சம்பவத்தை அடுத்து இக்கிராமம் சோகத்தில் தோய்ந்து காணப்படுவதாகவும் இக்கிராமத்திலுள்ள வீடுகளிலிருந்து வீட்டுக்கு ஒருவர் என்ற ரீதியில் இறந்துள்ளார்கள் என்றும் தெரிய வருகிறது.

இறந்தவர்களில் மூன்று பெண்களும் அடங்குவரென மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன:

நேற்று முன்தினம் பதிவுத் திருமண வைபவத்தின் பின்னர் விசேட மருந்துகள் கலக்கப்பட்ட விஷச்சாரயம் பரிமாறப்பட்டதாகவும் விருந்தின்பின்னர் ஒவ்வொருவராக இறந்ததாகவும் பொலிஸ் விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பாக விஷச்சாரயம் விற்ற கஸ்தூரி என்ற பெண்ணும் அவரது மகனும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்;

இத்துயரச் செய்தியை அறிந்த முதலமைச்சர் பன்னீர்ச்செல்வம் தனதுஆழ்ந்த கவலையைத் தெரிவித்ததுடன், இறந்தவர்களின் குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 25 ஆயிரம் ரூபாவும் மருத்துவமனையில் உள்ளவர்களுக்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கும்படி உத்தரவிட்டார்; (க-து)

# பிரிட்டிஷ் துருப்புக்கள்
# ஓமானில் பயிற்சிபெறுவது
# முற்றிலும் பொய்யானது
## பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(மஸ்கட்)

ஓமானில் ஆயிரத்திற்கும் அதிகமான பிரிட்டிஷ் படையினர் யுத்தப் பயிற்சியில் ஈடுபட்டு வருவதாக ஓமான் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்;

ஆனால் ஆப்கானிஸ்தான் மீதான தாக்குதல் நடவடிக்கையின் முன்னோடி நடவடிக்கையாக பிரிட்டன் மற்றும் ஓமான் துருப்புக்கள் பயிற்சி பெற்று வரலாம் என உறுதியற்ற செய்திகள் தெரிவிக்கின்றன:

இதே வேளை ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தாக்குதலில் ஓமானை ஒருதுரும்பாக பயன்படுத்த முனைவதாக பல்வேறு தப்பான அபிப்பிராயம், எழுப்பப்படுகிறது எனக் குறை கூறும் ஓமானின் பாதுகாப்பு அமைச்சர், ஓமான் படைகளுக்கு பிரிட்டிஷ் துருப்புக்கள் பயிற்சி அளித்து வருவதே உண்மையாகும்.

ஆனால்பிரிட்டிஷ் படைகள் ஓமானில் பயிற்சி பெறுவது முற்றிலும் பொய் என்று கூறியுள்ளார்.

இதனடிப்படையில் சுமார் 23 ஆயிரம் பிரிட்டிஷ் துருப்புக்கள் ஓமான் படைகளுக்கு பயிற்சி அளித்து வருகிறார்கள் என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சர் ஜெவ்கூடன் தெரிவிப்பதுடன் அவர்கள் எந்த இராணுவ நடவடிக்கைக்கும் தயார் என்றும் கூறியுள்ளார்; (க-07)

# பயங்கரவாதத்திற்கு எதிரான
# 10 நாடுகளின் மாநாடு ரத்து
# யந்திரத்துப்பாக்கியுடன் ஒருவர்கைது

(சோர்பியா)

முன்னர் கம்யூனிஸத்தைத் தமது கொள்கைகளாகக் கொண்ட 10 நாடுகளின் மாநாடுபல்கோரியாவில்நடைபெறவிருந்த வேளை கனரக இயந்திரத் துப்பாக்கியுடன் ஒருவர்கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனால் மாநாடுரத்து செய்யப்பட்டுள்ளது இது பற்றி மேலும் தெரியவருவதாவது;

அமெரிக்காவின் பயங்கரவாதத்திற்கு எதிராக ஆதரவு தெரிவிக்கும் நாடுகளின்தலைவர்களின் மாநாடு பல்கேரிய சோபியாவில் பிரமாண்டமான விடுதியில் நடைபெறவிருந்த வேளையிலேயே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார்;

மேலும்மேற்படிபத்துநாடுகளான பல்கேரியா, லித்வேனியா, லத்வியா எஸ்தோனியா, ஸ்லொவக்கியா ஸ்லொவீனியா, ரூமேனியா குரேஷியா, மசிடோனியா, அல்பேனியா ஆகியநாடுகளின் தலைவர்களுக்கு ஆபத்துகாத்திருப்பதாக பல்கேரியா உள்துறை அமைச்சர்தெரிவித்துள்ளார்;

இந்த நாடுகள் பயங்கரவாதத்திற்கு எதிராக ஒத்துழைப்பதுடன் நேட்டோ அணியில் இணைந்துகொள்ளவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளை மாநாட்டில் கலந்துகொள்ளவிருந்தநான்கு நாட்டின் தலைவர்களுக்குஏற்கனவே கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் பல்கேரிய உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்;

இதேவேளை ஆயுதத்துடன் கைது செய்யப்பட்ட குறித்த நபர் எந்நாட்டவர் என்பது இதுவரை தெரியவரவில்லை என்றும் இவர் பற்றிய விசாரணைகளை பொலிஸார் தீவிரமாக நடத்தி வருவதாகவும் தெரியவருகிறது; (க-7)

# ஆப்கான் மீது எவ்வகையிலும்
# தாக்குதல் இடம் பெறலாம்
## புஷ். பிளேயர் கூட்டாக தெரிவிப்பு

(வாஷிங்டன்)

ஆப்கானுக்கு எதிரான தாக்குதல் மிக விரைவில் இடம்பெறப் போவதாகவும் பின்லேடனை அமெரிக்காவிடம் ஒப்படைக்க விதிக்கப்பட்ட காலக்கெடு நிறைவுறும் தறுவாயில் உள்ளதாகவும் அமெரிக்க அதிபர் புஷ் மற்றும பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயர் ஆகியோர் கூட்டாக தெரிவித்துள்ளனர்;

மேலும் பயங்கரவாத ஒழிப்பிற்கு அமெரிக்காவுடன் நெருங்கிய நட்புறவு வைத்துள்ள ரொனிபிளேயர் இராணுவ நடவடிக்கைகளுக்கான திட்டம் பூர்த்திஅடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்;

இதே வேளை பொருளாதார ரீதியில் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு பெருமளவு நிதி உதவியளிக்க ஜி 7 கைத் தொழில் மய நாடுகள் முன்வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது; (க-07)

# அமெரிக்கா மீது தாக்குதல்
# பின்லேடன் சம்பந்தம் உண்டு
# விளக்கிபிரிட்டன்அறிக்கை

(லண்டன்)

செப்டெம்பர் 11 ஆம் திகதி அமெரிக்கா மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பின்லேடனும் அவரது 'அல்கைதா' அமைப்பும் சம்பந்தப்பட்டது என தாம் நம்புவதற்கான காரணங்களை விளக்கி பிரிட்டன் 21 பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

'அமெரிக்காவில் நடந்த பயங்கரவாத அட்டூழியங்களுக்கான பொறுப்பு' என்ற தலையங்கத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தற்கொலைத் தாக்குதலில் பங்கு பற்றிய 19 பேரில் 3 பேர் அல் கைதா அமைப்புடன் நெருங்கிய சகாக்கள் என்றும் இதல் ஒருவர் 98 இல் தான்சானியா, கென்யாவில், உள்ள அமெரிக்க தூதரகங்கள் தகர்க்கப்பட்டதிலும் 2000 ஆண்டில் யூ. எஸ். எஸ் கோல், விமானம் தாங்கி கப்பல் மீதான தாக்குதலில் சம்பந்தப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையில் பின்லேடன் பற்றயும், அவரது அல் கைதா அமைப்பு பற்றியும் அவர்களுக்கு தலிபான் ஆட்சியாளருடன் உள்ள தொடர்பு பற்றியும் விளக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. [எ-2]

# தலிபன்களுக்கு எதிராக
# தாக்குதல்நடத்தத்திட்டம்
## பிரிட்டிஷ் பிரதமர் எச்சரிக்கை

(லண்டன்)

ஆப்கானிஸ்தானின் ஆளும் தலிபான் மக்கள் படைக்கு எதிராகத்தாக்குதல் நடத்தத் திட்டங்கள் தீட்டப்பட்டு வருவதாக பிரித்தானிய பிரதமர் ரொனிபிளேயர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ரஷ்யா, பாகிஸ்தான், இந்தியா ஆகிய நாடுகளிற்கான சுற்றுப்பயணத்தை முடித்த பின்னர் விமான நிலையத்தில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்;

அவர் மேலும்பேசுகையில்; தலிபானுக்கு பொருட்களும் நிதியும் கிடைக்கும் வழிகள் துண்டிக்கப்பட்டு வருவதாகவும் அதேவேளை தலிபானுக்கு எதிராக வலுவான கூட்டணி உருவெடுத்து வருவதாகவும் குறிப்பிட்டார்: (து)

கற்றறிந்தார் கல்வி விளங்கும் கசடறச்
சொல் தெரிதல் வல்லாரகத்து

குறள்

# வலம்புரி

## பட்டதாரிகள் பொறுப்பு

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகத்திலிருந்து இவ்வாண்டு 1528 பேர் பட்டம் பெற்றுள்ளனர். கொழும்புப் பல்கலைக்கழகத்தில் இவ்வாண்டு 1550 பேருக்கு பட்டம் வழங்கப்பட்டது. இத்தொகையோடு ஒப்பிடுமிடத்து, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு எந்த வகையிலும் குறைந்ததல்ல என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

தனித்து வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் மட்டும் பல்கலைக்கழக அனுமதிகள் தீர்மானிக்கப்பட்டதற்கு மேலாக வெளிவாரிப் பட்டப்படிப்புகளும் துறைசார்ந்த கற்கை நெறிகளும் அறிமுகப்படுத்தப்பட்டதன் காரணமாகதமிழ்ச்சமூகம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பயனைப்பெற்றுக் கொள்ள முடிகிறது.

இவ்வாறு யாழ் பல்கலைக்கழகத்தை தமிழ்ச் சமூகத்தோடு இணைத்த பெருமை தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை அவர்களையே சாரும்.

ஓர் பல்கலைக் கழகம் தான்சார்ந்த இனத்திற்கு -சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய பணியை - பங்களிப்பை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இப்போது வழங்குவது மகிழ்வுக்குரியது.

அதேநேரம் தென்னிந்திய அறிஞர்களுக்கு கௌரவப் பட்டங்கள் வழங்குவதும் நமது பல்கலைக் கழகத்தின் தரத்தை - அதன் பெறுமதியைதேசியத்தரத்திற்கு அப்பால் சர்வதேச மட்டத்திற்கு நகர்த்தும செயலாகும். இதன்மூலம் ஈழத்தமிழ் பெருமையடைய முடியும்.

யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம் தனது கல்விப்பணியை ஆற்றுகின்ற அதேநேரம் பலகலைக் கழகத்திலிருந்து வெளியேறும் பட்டதாரிகள் தமது பொறுப்புணர்ந்து செயற்படுவது மிக மிக முக்கியமாகும். பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறுகின்ற ஒவ்வொரு பட்டதாரியும் தனது அறிவுப் புலத்தை தான்சார்ந்த சமூகம் அனுபவிக்கக் கூடிய வகையில தன்னை வழிப்படுத்திக் கொள்வதும், சமூக விழிமியங்களை கட்டிக்காக்க முன்வருவதும், ஏழை மாணவர்களின்கல்விமேம பாட்டிற்காக இப் பட்டதாரிகள் தமது சேவையை வழங்கவேண்டுமென்பதும் சமூகத்தின் பெருவிருப்பாகும்.

# 'நாம் சேவைக்காக' என்ற குறிக்கோளுடனே

# நற்பணியாற்றுகின்ற அரிமாக் கழகங்கள்

சர்வதேச அரிமாக் கழகங்கள் 8. 10 1917 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கடந்த 84 வருடங்களாக பல விதமான சமுதாய வளர்ச்சி சம்பந்தமான செயற்திட்டங்களில் ஈடுபட்டுஉலகத்திலேயே ஒரு மிகப்பெரிய சேவை நிறுவனமாக விளங்கு கின்றது. இத்தினத்தின் நினைவாகவும் அதன்ஸ்தாபகர் மெல்வின்ஜோன்ஸ்ஸை கௌரவித்தும் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் மாதம் 8ஆம்திகதிஉலக அரிமாக்கள் சேவைகள் தினமாக கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தில் சர்வதேசரீதியில் பரந்து செயற்படும் ஏறத்தாழ 45000 அரிமாக்கழகங்களும் பலவிதமான சமூக செயற் திட்டங்களில் ஈடுபடுவர். இத்தினத்தின்முக்கியத்துவம் சம்பந்தமான விபரங்களுடன் இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

சர்வதேச அரிமாக் கழகங்கள் அமெரிக்காவிலுள்ள லா சேல் ஹொட்டலில் 1917 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அக் காலத்தில் பல விதமான கழகங்கள் தங்களுடைய கழக அங்கத்தவர்களின் பொருளாதார நன்மைகளைக் கவனிப்பதற்காகவே மட்டும் செயற்பட்டன. இவ் தேவையில் இன்சூரன்ஸ் கம்பெனி ஒன்றில் அதிகாரியாக பணி புரிந்த மெல்வின் ஜோன்ஸ் என்னும் துடிப்பான இளைஞர் தனது துணைவியார் றோஸ் அமன்டாவுடன் இணைந்து 'இவ்வாறான மனிதர்களைக் கொண்டு ஒரு சமூக நலன் காக்கும் அமைப்பை ஏன் அமைக்க முடியாது' எனத் தீவிரமாக யோசித்தார். இதன் பலனாக 7. 6.1917 ம் திகதி அரிமாக்கழகங்கள் உருவாக்க எண்ணக்கரு ஏற்பட்டாலும் 8. 10. 1917 ஆம் திகதி டெக்ஸாஸ் நகரில் நடாத்தப்பட்ட மகா நாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பின்பே சர்வதேச அரிமாக்கழகங்கள் உருவாகின. மெல்வின்ஜோன்ஸ் செயலாளர் பதவியை ஏற்று அரிமாக்கழகங்களை வழி நடத்தினார்.

இவ்வாறு சமுதாய வளர்ச்சிக்காக உருவாகிய அரிமாக் கழகங்கள் உடனடியாகவே முதலாவது உலக மகாயுத்தத்தினால் ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு உதவத்தொடங்கின. அத்துடன் 1919 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பரவிய கொடிய காய்ச்சலுக்கும் எதிராகபல சேவைகளும் செய்தனர் 1920 ஆம் ஆண்டுகளில் அது மிகவும் துரிதமாக வளர்ந்து மெக்சிகோ சீனா கனடா ஆகிய நாடுகளுக்குப் பரவத் தொடங்கி 2200 கழகங்களுடன் 80000 அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு துரித வளர்ச்சி கண்டது தற்போது அரிமாக்கழகங்ள் 185 நாடுகளில் 45000 கழகங்களுடனும் 14 இலட்சம் அங்கத்தவருடனும் உலகிலேயே ஒரு மிகப்பெரிய சேவை நிறுவனமாக விளங்குகின்றது. இது தவிர பாடசாலை மட்டங்களில் மாணவர்கள் அடங்கியதாக லியோ கழகங்களும் அரிமாக் கழகங்களுடன் இணைந்து செயற்படுகின்றன.

### பார்வைக்கு முதலிடம்

1925 ஆம் ஆண்டு நடைபெற்ற சர்வதேச மகா நாட்டில் ஹெலன் கீலர் அம்மையார் வெளிப்படுத்திய சவாலை சர்வதேச அரிமாக் கழகங்கள் ஏற்றுக்கொண்டு அன்றுதொடர்கம்இன்றுவரை விழிப்புலன் சம்பந்தமான செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி வருகின்றன. பலவிதமான கண் பரிசோதனை நிலையங்கள் கண்வங்கிகள் விழிப்புலன் குறைந்தோர்க்கான உதவிகள் அடங்கிய பல செயற் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றனர். இது வரை 130 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேலாக பெரிய அளவிலான விழிப்புலன் செயற்றிட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

### குறிக்கோள்

1950 ஆம் ஆண்டு காலப் பகுதியில் அரிமாக்கழங்களின் குறிக்கோளாக 'நாம்சேவைக்காக' (WB SERVE) ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதைத் தொடர்ந்து 1961ஆம் ஆண்டு இலினோய்ஸ் நகரில் சர்வதேசஅரிமாக்கழகங்களின் தலைமைச் செயலகம்அமைக்கப்பட்டது 13. 1.1879 ஆம் ஆண்டு பிறந்த மெல்வின் ஜோன்ஸ் தனது 44வருட அரிமாச் சேவையின் நிறைவுடன் 1961 ஆம் ஆண்டு அமரத்துவ

(2 ம் பக்கம் பார்க்க)

**அரிமா. செ.ஞானராஜா**
பிராந்தியத்தலைவர்
சர்வதேச அரிமாக் கழகங்கள்
மாவட்டம் 306 B- பிராந்தியம் - 10

(இன்று சர்வதேச அரிமாக்கழகங்களின் நினைவு தினம்)

# இலங்கையின் தேசியக் கல்வி மரபிற்கு

# தமிழர்களும் பெரும் பங்காற்றியுள்ளனர்

இலங்கையின் தேசியக் கல்வி மரபானது, பன்முகப் பண்பாட்டு விழுமியத் தளங்களை அடிப்படையாகக் கொண்டும், பல்வேறு கால கட்டங்களில் படிமுறை வளர்ச்சி கண்டும், செழுமை பெற்ற தொன்மரபுச் செல்நெறியாகும், ஆன்மீகத் தேடல்களையும், ஒழுக்கப் பிரமாணங்களையும், வாழ்வின் இன்றியமையாத தொழிற் பயில்வுகளையும், பௌத்த, இந்து, இஸ்லாமிய சமயங்களின் பின்னணியில் இலங்கையின் பண்டைக் கல்வி முறை பின்பற்றியிருந்தது. இருப்பினும், அந்நிய ஆட்சியாளரின் ஊடுருவல்களினால் நீண்டதொரு ஐந்நூறு ஆண்டுகாலப் பகுதியினுள் அலைக்கழிக்கப்பட்ட இலங்கையின் தேசியக் கல்வியானது, உள்வாங்குகைகளினாலும், வெளியேற்றுகைகளினாலும் ஊட்டமும், மாற்றமும் காணுவதாயிற்று. தீமைகள் கலந்த நன்மைகளைப் பெறுவதாயிற்று.

### சமய மறுமலர்ச்சி

ஆங்கிலேயர் ஆட்சியின் பிற்கூறறில் முகிழ்த்து வெடித்துக் கிளம்பிய சமய மறுமலர்ச்சி இயக்கமானது, தேசிய சிந்தனைகளுக்கு உற்சாகமளித்தது தேசிய விடுதலைக்கும் தேசியப் போராட்டங்கள் எழுச்சி பெறுவதற்கும் மொழி, சமயம் ஆகிய இரண்டையும் பாதுகாத்து நிலை நிறுத்தும் சுதேசிய மக்களின் நடவடிக்கைகள் முன்மாதிரியாக அமைந்தன. அநகாரிக தர்மபால, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், அறிஞர் சித்திலெப்பை முதலானோர் சமயமறுமலர்ச்சி இயக்கச் செயற்பாடுகளின் வழிகாட்டிகளில் சிலராவர். சிங்கள பௌத்தமானது இலங்கையின் தெற்கில் எழுச்சி கண்டதைப் போலவே, சைவத் பலராவர். ஆறுமுகநாவல வழியில் அவரது பரம்பரையினர் பாடசாலைகளை நிறுவியும், அச்சகங்கள நிறுவி புத்தகங்களை எழுதி வெளியிட்டும், புராணபடனம், பிரசங்கம் ஆகியன நிகழ்த்தியும், ஆங்கிலக்கல்வி, தொழிற் கல்வி சமயக்கல்வி, அழகியற் கல்வி, விஞ்ஞானக் கல்வி ஆகியவற்றை வழங்கியும், இலவசக் கல்வி தாய் மொழிக் கல்வி முதலியவற்றுடன் பல்கலைக் கழகக்கல்விக்கு முனைப்புடன் உழைத்தும் பணிபல செய்தனர் இத்தகைய பணிகளில் நாவலர் பரம்பரையினர் மாத்திர மன்றி, ஏனைய தமிழர்களும் ஈடுபட்டனர்

**ஆறுமுகம் ஸ்ரீஸ்கந்தமூர்த்தி**
B. A., Dip. In-Ed., M. Phl (Ed) S. L. E. A. S.
முதுநிலை விரிவுரையாளர்
ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்

தமிழ் மறுமலர்ச்சிக்கு ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் அவரது பரம்பரையினரும் வடக்கில் உழைத்தனர். அறிஞர் சித்திலெப்பை போன்றோர் இஸ்லாமிய மறுமலர்ச்சியில் ஆர்வங்காட்டினர். இலங்கையின் தேசியக் கல்வி மரபானது சமயம், மொழி ஆகியவற்றைத் தழுவி வளரலாயிற்று.

### தமிழர் பணி

இலங்கையின் தேசியக் கல்விக்கு இந்துப் பாரம்பரியத்தின் அடியொற்றி நின்று பங்களிப்புச் செய்த தமிழர் வடக்குக்-கிழக்கு மாகாணங்களுக்கு அப்பாலும் மலையகம், கொழும்பு போன்ற இலங்கையின் பல்வேறு இடங்களிலும் தமிழ்ச் சிறார்களுக்கான பணிகள் தமிழர்களாலேயே மேற்கொள்ளப்பட்டன. பல்வேறு தமிழர் நிறுவனங்களுங்கூட இத்தகைய தொண்டினை வழங்கலாயின.

### இலவசக் கல்வி யோசனை

சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், சேர். முத்துக்குமாரசுவாமி,

(02ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## உனது விருப்பம்

வேண்டத் தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும பரிசொன்று உண்டென்னில்
அதுவும் உந்தன் விருப்பன்றே.

மாணிக்கவாசகர்

அண்ணலுக்கே நான் ஆட்பட்டவன் அவருக்குத் தொண்டு புரிவதல்லாது வேறு எதையும் அறியேன்.

நல்ல வேலைக்காரன் ஒருவன் தனது தலைவனிடம் தன்னை ஒப்படைத்து விடுகிறான் சம்பளம் கேட்பதில்லை. எதைக்கொடுத்தாலும் திருப்தியோடு ஏற்றுக் கொள்கிறான். கொடாவிட்டால் குறைகூறுவதில்லை. அத்தகைய வேலைக்காரன் விஷயத்தில் தலைவனது பொறுப்பு மிகப் பெரியது ஆகிறது, கடவுள் தலைவன் நான் வேலைக்காரன்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்

# அரசு-ஜே.வி.பி உடன்படிக்கை புலிகளுடன் பேசுவதை தடுக்காது

## ஐ.தே.கவுக்கு அமைச்சர்கள் கடிதம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை தொடர்ந்து நடாத்துவதற்கு தாம் ஜே வி.பி யுடன் செய்து கொண்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தடையாக இல்லை என்று பொ.ஐ.முன்னணி ஐ.தே.கவிடம் தெரிவித்துள்ளது. தாம் கடந்த புதன் கிழமையன்றுஜே வி.பி யுடன் பேச்சுக்கள் வைத்துக் கொண்டதாகவும் அதில்ஏற்பட்டுள்ள உடன்பாட்டின் படி தம்மால் புலிகளுடன் பேச்சுக்களை தொடரமுடியுமென்றும் பொ ஐ முன்னணியின் 5 உறுப்பினர்குழு கடிதமூலம் ஐ.தே.கவிற்கு தெரிவித்துள்ளது.

ஆயினும் விடுதலைப் புலிகளுடன் அதிகாரப் பரவலாக்கம் பற்றி எந்த வொரு தீர்வு ஏற்படுவதற்கு முன்பும் அது தொடர்பாகதென்னிலங்கையில் பரந்த அடிப்படையிலான கருத்துடன்பாடு ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனை மட்டும் விதிக்கப்பட்டுள்ளதாகவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தில்டி:எம்ஜயரட்ண மஹிந்தராஜபக்ஷ, லக்ஷ்மன் கதிர்காமர் ரத்வத்த, மங்கள சமரவீர ஆகியோர் ஒப்பமிட்டுள்ளனர்.

இதற்கு முன்னர் ஐ.தே.க. பொ.ஐ முன்னணிக்கு எழுதிய கடிதத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 20 ஆவது பிரமாணம் விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் நடத்துவதைத் தடுக்கிறது என்று தெரிவித்து,2002 செப்டம்பர் வரையும் இவ்விடயத்தில் பொ. ஐ முன்னணிதனது கைகளை தானே கட்டிக் கொண்டுள்ளதா எனவும் கேட்டிருந்தது. (ந)

### இன்று ஆராய்வர்

(கொழும்பு)

அரசுமீதான நம்பிக்கை இல்லாத்தீர் மானம் தொடர்பாகவும் அரசியல் நிர்ணய சபைக்குபிரதிநிதியைத்தெரிவு செய்வது தொடர்பாகவும் எதிர்க்கட்சித்தலைவர்கள் நாளை கொழும்பில் கூடித்தீர் மானிக்கவுள்ளனர்.

ரணில்விக்கிரமசிங்கா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். [வ]

## பொ. ஐ. மு - ஸ்ரீ. சு. கட்சி மத்தியகுழு இன்று கூடும்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்றக்குழுக் கூட்டமும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மத்தியகுழுக் கூட்டமும் இன்று அவசரமாகக் கூடவுள்ளன.

அரசுக் கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஐக்கியதேசியக்கட்சி சமர்ப்பித்த நிலையில் மேற்படி இருகூட்டங்களும் நடைபெறவுள்ளமை தறபோதையஅரசியல் தளம்பல் நிலையை எடுத்துகாட்டுவதாக உள்ளது என்று அரசியல் அவதானிகள் கருதது வெளியிட்டுள்ளனர்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பாக இக் கூட்டங்களில் விரிவாக ஆராயப்பட்டு தீர்மானம் எடுக்கப்படவுள்ளது.

இக் கூட்டத்தின் போது அரசுக்கும் பாதகமான சூழ்நிலைகள் தென்படுமானால் அரசுநடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகள் பற்றியும் ஆராய்ந்து தீர்மானிக்கப்படவுள்ளதாகவும் நிலைமைஅரசுக்கு எதிர்மாறாக இருப்பின் மீண்டும் ஒருமுறை பாராளுமன்றம் ஒத்தி வைக்கப் படலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## சேக்கிழார் அடிப்பொடியின் இன்றையசொற்பொழிவு

தமிழக அறிஞர் சேக்கிழார் அடிப்பொடி நடராஜன் இராமச்சந்திரன் அவர்கள் இன்று பல்வேறு இடங்களில் சொற்பொழிவாற்ற வுள்ளார்.

இன்று காலை 9மணிக்கு மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியிலும், 10.30 மணிக்கு ஸ்கந்தவரோதயாக் கல்லூரியிலும் சொற்பொழி வாற்றுவார்.

தொடர்ந்து பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தில் சிமாட்டி இராமநாதன் நினைவுப் பேருரையிலும் கலந்து கொள்வார்.

மாலை 5மணிக்குஇணுவில் பரராஜசேகரப் பிள்ளையார் கோவிலில் ஆசிரியர் ஆறுதிருமுகனின் தலைமையில் இடம் பெறும்நிகழ்வில்சொற்பொழி வாற்றுவார். இதில் யாழ் பல்கலைக் கழக வணிகத் துறைத் தலைவர் க.தேவராஜா அறிமுக உரையை நிகழ்த்துவார். (ந)

## நியமனம்வழங்கியதன்மூலம் 18-வது பிரமாணத்தை அரசு மீறிவிட்டது

(கொழும்பு)

பொ: ஐ. முன்னணிக்கும் ஜே. வி. பி க்குமிடையில்புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகிய பின்னர் இலங்கைஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்திற்கு 30பேரை முறையற்ற வகையில் நியமனம் வழங்கியதனால் அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் 18வது பிரமாணத்தை மீறியுள்ளது.

உரிய முறைகளைப் பின்பற்றாமல் தகுதிகாண் அரசாங்கக்காலமாகிய ஒரு வருடத்திற்கு நியமனங்களோ இடமாற்றங்கள் பதவி உயர்வுகளோ வழங்கப்படக்கூடாது என்று 18வது பிரமாணத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது ஆயினும் பிரதியமைச்சர்களான மங்களசமரவீர, அனுராபிரியதர்சனயாப்பா, ஆகியோரின் நிர்ப்பந்தத்தினால் 32பேருக்கு நியமனம் வழங்கப் பட்டுள்ளது.

பெரும்பாலும் பொ: ஐ முன்னணி ஆதரவாளர்களே முறைப்படியான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்படாமல் நியமிக்கப்பட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது. (ந)

## தமிழ்க் கட்சிகள் தமது பிரதிநிதிகளை ஒருமித்து தெரிவு செய்யாவிடில் வாக்கெடுப்பில் தெரிவு இடம்பெறும்

(கொழும்பு)

17வது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படும் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ் மக்கள் சார்பிலும் மலையக மக்கள் சார்பிலும் இடம் பெறவுள்ள பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்கு இன்று இறுதித் தினமாகும்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல்கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கக் கூடிய தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து அரசியல்நிர்ணயசபைக்கு பிரதிநிதி ஒருவரை தெரிவு செய்யாத பட்சத்தில் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவரும் இணைந்து தமிழ்ப் பிரதிநிதி யொருவரைத் தெரிவு செய்வார். அல்லது பாராளுமன்றத்தில் பெயர்கள் சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்புஒன்றின் மூலம் தமிழர் பிரதிநிதி தெரிவு செய்யப்படலாம் என்றும். இதேபோல் மலையகத் தமிழர்களின் பிரதிநிதி தெரிவு விடயத்திலும் இழுபறி நிலை காணப்படுவதால் இதேநடைமுறை பின்பற்றப்படலாம் மென்றும் அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (வ)

## அமெரிக்கா---

வெல்டிஸ் இருந்து ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூல், ஜலலபாத், கண்டகார் பகுதிகளுக்கு 'குறூஸ்' ஏவுகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றது.

அதேவேளை குண்டுவீச்சு விமானங்கள் பயங்கர குண்டுத்தாக்குதல்களையும் மேற் கொண்டு வருகின்றன.

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் மட்டும்நான்கு ஏவுகணைத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளது.

### கண்டகார் இராணுவத் தலைமையகம் நிர்மூலம்

இத்தாக்குதலின் போது ஒரு ஏவுகணை காபூலில்உள்ள பாதுகாப்பமைச்சிற்கு அருகே விழுந்து வெடித்ததில் பலத்த சேதம் ஏற்பட்டதுடன்கண்டகார் பகுதியில் உள்ள இராணுவத் தலைமைக் கட்டளையகமும் தாக்கப்பட்டு நிர்மூலமாக்கப்பட்டுள்ளது.

கண்டகார் விமான நிலையத்திலும் குண்டு வீச்சு விமானங்கள் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டுள்ளது. இதனால் விமான நிலையம் பலத்த சேதத்திற்குள்ளானதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின்ஏவுகணைத் தாக்குதலால் ஜலலாபாத் நகரமும் பலத்த சேதமடைந்துள்ளது.

அமெரிக்காவின் இத்தாக்குதல் சம்பவங்களை அடுத்து ஏற்படக் கூடிய விளைவுகளுக்கு முகங் கொடுக்கக்கூடிய வகையில் ஆப்கானிஸ்தான் தயாராகி வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### மக்களின் இடம் பெயர்வு தாக்குதல் தொடர்கிறது

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தொடுத்துள்ள தாக்குதல்களை அடுத்து ஆப்கான் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேறிக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச் செய்தி எழுதும் வரை அமெரிக்கா பிரித்தானியா இணைந்து ஆரம்பித்துள்ள தாக்குதல்கள்உக்கிரமடைந்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கான் மீது அமெரிகா மேற்கொண்டுள்ள 'பழிக்குப் பழி வாங்கும்' தாக்குதலை அடுத்து 21ம் நூற்றாண்டின் முதலாவது உலக யுத்தம் வெடிக்கலாம் என்று சர்வதேச அரசியல்இராணுவ ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (வ)

## பத்திரிகை

(2-ம பக்கத் தொடர்ச்சி)

போது இது பற்றி ஆலோசனைகள் எதுவும இடம் பெறவில்லை எனறும் ஆலோசனைக்கு நேரம ஒதுக்குமாறு இது வரை ஆணைக்குழு தயமைக் கேட்கவில்லை எனறும இதற்கு ஆணைக்குழுவின் தலைவர்ரே சாட்சி எனறும் ஜனாதிபதி சார்பில் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துளளது. (க-07

## கோப்பாயில்

பிரஸ்தாப திருடர்கள் கோப்பாய் சந்தியில இருந்து ரைக்ரரில் ஊர்வலமாக நாம திருடர்கள் என சத்தமிட்டவாறு கோழிககுஞ்சு, ஆட்டுக்குட்டி, சைககிள மற்றும் திருட்டு பொருட்களுடன் பருத்தித் துறை வீதி இருபாலைச் சந்தி, கல்வியங்காடடுச் சந்தி ஊடாக கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

கோப்பாய் பகுதியில் அண்மைக்காலமாக தொடர்ந்து திருட்டுச் சம்பவங்கள் இடம் பெற்று வந்தமை பலருக்கு பீதியை ஏற்படுத்தி வந்தது, இளைஞர்கள் மேற்கொண்ட இம் முயற்சியை மக்கள் பெரிதும் பாராட்டினர்.

கோப்பாயில் இடம்பெற்ற திருட்டுக்கள் குறித்து கோப்பாய் பொலிஸில்முறைப்பாடுகள் செய்த போதும் நடவடிக்கை ஏதும்எடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்திருந்தனர்.

இதேவேளை நேற்றிரவு தப்பியோடிய ஒருதிருடனைத் தேடும்முயற்சியில் சுமார் 250 இளைஞர்கள் ஈடுபட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-22)

## நாகர்கோவிலில் மோதல்

(யாழ்ப்பாணம்)

நாகர் கோவில் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவதினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் மூவர் காயமடைந்ததாக விசேட ஊடகத்தகவல் நிலையம்வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## நம்பிக்கை...

மத்தியில் இது அவசியம் என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

ரிஸ்வி சின்னலெப்பையின் மரணச்சடங்கில் கலந்து கொள்ளச் சென்ற அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவிடம் 'கதவுகளைமூடிவிடாதீர்கள்' என ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கிறார். தாம் அரசாங்கத்துடன் பேச்சுக்களை வைத்துக்கொள்ள விரும்புவதாகவும், தேசியப்பட்டியல் வெற்றிடத்திற்கு எம்.எம்.எம் ஹிஸ்புல்லாவையோ வேறு எவரையேனுமோ நியமிப்பதன் மூலம எம்முடன் பேச்சுக்கள் நடத்துவதற்கான கதவுகள் மூடப்பட்டுவிடும் என அவர் தெரிவித்துள்ளார் இதுபற்றி ஜனாதிபதியுடன் பேசுவதாக அவரும் உறுதியளித்திருந்தார். பொ ஐ முன்னணி, முஸ்லிம் காங்கிரசுக்கிடையே ஒரு உடன்பாடு ஏற்படும் என்று ரவூப் ஹக்கீம் பெரும் நம்பிக்கை கொண்டிருக்கிறார் என்று தெரிவிக்கப் படுகிறது. (ந)

## நம்பிக்கையில்லா பிரேரணை சோதிட ரீதியில் அரசுக்கு 11-ம் திகதியே சாதகம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கெதிராக ஐ தே. க. கொண்டுவரும் நம்பிக்கையில்லாப்பிரேரணை ஒக். 11ம் திகதி வியாழக்கிழமை விவாதத்திற்கு எடுக்கப்படலாம் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன. சோதிடரீதியாக இத்திகதியே பொ. ஐ. மு. ற்கு அதிர்ஷடதிகதியாகும் என்று அறியப்படுகிறது. அவ்வாறாயினும் இன்று திங்கட்கிழமை நடைபெறவுள்ள கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இதுபற்றி இறுதியான முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்கத் தரப்பிற்கு வெற்றி நிச்சயம் என்றும் இதனை விவாதிப்பதற்கு கிடைக்கக்கூடிய முதலாவது சந்தர்ப்பம் பாராளுமன்ற விவாதத்திற்கு வழங்கப்படும் என்று அரசாங்கத்தரப்பு கொறடாவான ரிச்சட்பத்திரன முன்னரே தெரிவித்திருந்தார். இன்றைய கட்சி நிலைவரங்களின் படி பொ. ஐ மு. இடம்109எம்பிக்கள் உள்ளனர். ம.வி.மு. இடம் 10எம்பிக்கள் உள்ளனர். இதேவேளை முஸ்லிம் காங்கிரஸ் முடிவு அறிவிக்கவில்லை. அதேவேளை அரசாங்கத் தரப்பின் அதிருப்தியாளர்கள் 8பேர் உரிய நேரம் வரும் போது எதிர்க்கட்சித்தரப்புக்கு மாறுவர் என்றும் நம்பகரமாக தெரியவருகிறது. (ந)

## நம்பிக்கைஇல்லா

விரிவாக ஆராயப்பட்டது:

அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணத்தவறியதாலும், விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு கிடைத்த சந்தர்ப்பங்களை அரசு பயன்படுத்தத் தவறியதாலும் நம்பிக்கை இல்லாப் பிரேரணையை ஆதரிப்பது என்று முடிவெடுக்கப் பட்டதாக வி. ஆனந்தசங்கரி எம்.பி தெரிவித்துள்ளார். (வ)

## தலிபானின்

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

அமெரிக்காவின் சமாதான வழியொன்றையும் தலிபான் ஏற்றுக்கொண்டு எமக்கு ஒத்துழைப்பு வழங்காமையினாலேயே இத் தாக்குதலை நாம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எமது சமாதான முயற்சிகளுக்கு தலிபான் ஒத்துழைப்பு தந்திருந்தால் இத்தகைய தாக்குதல்களை அமெரிக்கா ஒருபோதும் ஆரம்பித்திருக்காது.

யுத்தத்தின் போது அகதிகளாக வெளியேறும் ஆப்கான் மக்களுக்கு எல்லா வகையான நிவாரண உதவிகளையும் அமெரிக்கா செய்யுமென்றும் ஜனாதிபதி புஷ் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (வ)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரால் இல: 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.